Registered as a Newspaper

# தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

விலை : ரூபா 20.00

செய்தி - 33 | மே 14-20, 2016 | பக்கம் - 20

இன்று முதல்...
புதிய பொலிவுடன்
உள்ளே...
"வீழ்ச்சி காணும் பிரித்தானிய பல்கலைக்கழகங்கள்"

# போரில் இறந்த சொந்தங்களுக்கு தினச்செய்தியின் நினைவுத் தூபி



(யாழ்ப்பாணம்)

முப்பது வருடகால போரில் இறந்த மக்களுக்கான அறுபது அடி உயரமான நினைவுத் தூபி ஒன்றை தினச்செய்தி நிர்மாணித்து, 2017 மே 12 ஆம் திகதியன்று திறந்து வைக்க முடிவு செய்துள்ளது.

நடைபெற்ற யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் இறந்துள்ளார்கள். அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இந்த பிரமாண்டமான நினைவுத் தூபி ஒன்றை ரூபா 2.5 கோடி செலவில் நிர்மாணிக்க தினச்செய்தி திட்டமிட்டுள்ளது.

இந்த நினைவுத் தூபியுடன் 24 மணி நேரமும் அணையாத ஜோதி ஒன்றை ஏற்றி வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நினைவுத் தூபி நிர்மாணிப்பதற்கு தேவையான காணியை முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தினச்செய்திக்கு அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளார்.

இந்த நினைவுத் தூபி புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு வரும் பாதையில் 7 கி.மீ தூரத்திலும், முல்லைத்தீவிலிருந்து வரும் போது 3 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் சந்தியில் அமைக்கத் திட்டமிப்பட்டுள்ளது.

நினைவுத் தூபியை ஒரு பூங்காவின் மத்தியில் அமைப்பதென்றும், இந்தத் தூபி ஆகக் குறைந்தது 25 கி.மீ. சுற்றளவு பிரதேசத்தில் இருந்து பார்ப்பதற்கு தெரியக் கூடியவாறு அமைப்பது தொடர்பாக கட்டடக் கலைஞர்களுடன் கலந்தாலோசித்து வரப்படுகிறது.

24 மணி நேரமும் சுடர் விட்டெரியும் அகல் விளக்குடன் சர்வமத பிரார்த்தனை மண்டபம் ஒன்றும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

போரில் இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்த வருபவர்களுக்கென்று விஷேடமாக இந்த மண்டபத்தில் சர்வமதப் பிரார்த்தனை ஒழுங்குகளை தினசரி நடத்துவதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## புதைக்கப்பட்ட பிரபாகரனின் பூதவுடலைத் தாருங்கள் முறைப்படி நீத்தாருக்கான ஈமக்கிரியைகள் செய்வதற்கு


(யாழ்ப்பாணம்)


- எம்.கே. சிவாஜிலிங்கம்

பிரபாகரனின் உடல் புதைக்கப்பட்டிருந்தால் புதைத்த உடலை மீளப்பெற்று நீத்தாருக்கான உரிய ஈமக்கிரியைகளைச் செய்வதற்கு அனுமதி தாருங்கள் என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.


இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் கூறினார்.

19 இல்





## ஆனையிறவில் 26 வருடங்களுக்குப் பின்னர் ஆகஸ்டில் உப்பு சாகுபடி



(கொழும்பு)

சுமார் 26 வருடங்களுக்குப் பின்னர் முதன் முதலில் ஆனையிறவில் உள்ள உப்பளத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் உப்பு சாகுபடி நடைபெற உள்ளது.

19 இல்




## வடமாகாண சபையின் சுண்ணாம்புக் கல் அகழ்வு நம்பக் கூடியதாக இல்லை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சுண்ணாம்புக்கல் அகழ்வது சம்பந்தமான வடமாகாண சபையின் அறிக்கை நம்பகத் தன்மையற்றது என்று தெரியவருகிறது.

02 இல்

தினச்செய்தி
வாரமலர்
Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

# உயிர் நீத்த சொந்தங்களை நினைவு கூருவோம்

நாட்டில் நடைபெற்ற 30 வருட காலத்திற்கு மேலான உள்நாட்டுப் போரில் உயிரிழந்த எமது சொந்தங்களை நினைவு கூருவதற்கு இலங்கை அரசாங்கம் இறுதியாக அனுமதி வழங்கியுள்ளது.

சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவாதனா இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் போரில் உயிரிழந்த தமிழீழ விடுதலை புலிகளுக்கு நினைவு கூர முடியாது. ஆனால் உயிரிழந்த பொது மக்களை நினைவு கூர முடியும் என்று கூறியுள்ளார்.

அது மாத்திரம் அல்லாது இறந்தவர்களுக்கு நினைவு தூபி அமைக்கலாம் என்றும் அதற்கு அரசு எந்தத் தடையும் விதிக்காது என்றும் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஏற்கனவே படுகொலை செய்யப்பட்டு செம்மணி மயானத்திலும் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 2009 ஆம் ஆண்டு ஆரம்பமான இந்த யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்துள்ளார்கள்.

இந்த ஆயிரக்கணக்கான இறப்பு முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்றது. எனவே உயிர்நீத்தோருக்கான நினைவு தூபியினை முள்ளிவாய்கால் பிரதேசத்திலேயே அமைப்பதே சாலச் சிறந்ததாகும்.

எமது சொந்தங்களே எமது நாட்டின் கண்மணிகள். நாம் மனதுக்குள் வெம்பி வெம்பி அழுத காலம் மலையேறி பகிரங்கமாக நினைவு கூர சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

எமது மச்சான், மாமன், உற்றார், உறவினர், அண்ணன் தம்பி, அக்கா, தங்கை ஆகிய பலர் இந்த யுத்தத்தில் பலியாகியுள்ளனர். இவர்களில் பலர் யுத்தம் நடக்கின்ற பொழுது எதிர்பாராத விதமாக துப்பாக்கிச் சூட்டிலும், குண்டுகள் வீசப்பட்டும் இறந்துள்ளார்கள். இவர்களின் இறப்பு எமது நெஞ்சுப் பெட்டகத்தை விட்டு என்றும் நீங்காது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இறந்தவர்களை நினைத்து அழவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் நாங்கள் அடைந்த துன்பம் எழுத்தில் சொல்லவே முடியாது. ஆனால் இன்று மைத்திரிபால சிறிசேன அரசு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இறந்தவர்களுக்கு நினைவுகூரும் விதமாக இறந்தவர்களுக்கு நினைவு தூபி அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இது ஒரு பெரிய விடயமாகும். நீண்ட காலமாக எமது இறந்த உறவுகளின் ஆத்ம மோட்சத்துக்கு எவ்வாறு நாங்கள் எமது கடமைகளை நிறைவேற்றுவது என்று காத்திருந்தோம். அதற்கு முடிவும் விடிவும் வந்துவிட்டது.

மே மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை எமது சொந்தத்தினை நினைவுகூர்ந்தும் மாதந்தோறும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ஓர் நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும்.

அதற்கமைவாக “தினச்செய்தி” 60 அடி உயரத்தில் ஓர் நினைவு தூபியை நிர்மாணித்து 2017 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி திறந்து வைப்பதாக அறிவித்துள்ளது. இந்த நினைவுத் தூபி முள்ளிவாய்க்கால் சந்தியில் அமைந்துள்ள ஓர் பூங்காவில் நிறுவுவது என்றும் 24 மணித்தியாலம் அணையாத ஜோதி பிரகாசமாக எரிவதற்கும் ஒழுங்குகள் திட்டமிடப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது நினைவுத் தூபிக்கு வருகை தருபவர்கள் தமது சொந்த பந்தங்களை நினைவு கூரும் அதே வேளை அவர்களுக்காக பிரார்த்தனை செய்வதற்காக தியான மண்டபம் அமைப்பதற்கும் தினச்செய்தி முன்வந்துள்ளது. இறந்து போன சொந்தங்களுக்கு தினமும் பூசை செய்வதற்கும் தியானம் செய்வதற்கும் இந்த தியான மண்டபத்தில் ஒழுங்குகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# ஆனையிறவு...

சுமார் 26 வருடங்களுக்குப் பின்னர் முதன் முதலில் ஆனையிறவில் உள்ள உப்பளத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் உப்பு சாகுபடி நடைபெற உள்ளது.

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு ஆகிய பகுதிகளில் சுமார் 1 500 நிலப் பரப்பில் கடந்த 1990 ஆம் ஆண்டுக ளில் உப்பு உற்பத்தி நடைபெற்று வந்தது.

ஆனையிறவிலுள்ள உப்பளம் 1938 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை 60 000 தொடக்கம் 80 000 மெற்றிக் தொன் உப்பு வருடா வருடம் உற்பத்தி செய்ததாக தெரியவருகின்றது.




குறிஞ்சாத் தீவுக்கு வடக்கே 1169 ஏக்கர் நிலப்பரப்பிலும், குறிஞ்சா தீவுக் குத் தெற்கே 777 ஏக்கர் நிலப் பரப்பிலும், முன்னர் உப்பு உற் பத்தி செய்யப்பட்டது.

1990 ஆம் ஆண்டு நிறுத் தப்பட்ட ஆனையிறவு உப்பு உற்பத்தி வேலைகள் யுத்தம் முடிவுற்ற 2009 ஆம் ஆண்டின் பின்னர் உற்பத்தி வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. 2009ஆம் ஆண்டின் பின்னர் டக்ளஸ் தேவானந்தாவின் கீழிருந்த சிறு கைத்தொழில் அமைச்சின் மூலம் ஆனையிறவு உப்பளம் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதிக்குப் பின் ஆனையிறவு உப்பளம் திரு. டி.எம். சுவாமிநாதனின் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. மூன்று மாத காலத்திற்குப் பின் றிஷாட் பதியுதீன் அமைச் சராய் உள்ள கைத்தொழில் வணிக அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்த அமைச்சுக்குக் கீழ் இயங்கி வந்த மாந்தை சோல்ட் லிமிட்டட் இடம் கையளிக்கப்பட்டு உற்பத்திகள் ஆரம்பமானது.



மாந்தை சோல்ட் லிமிட்டட் தலைவர் எம். எம். அமீன் மீராவிடம் தொடர்பு கொண்டபோது ஆனையிறவு உப்பு உற் பத்தி வேலைகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் கட்டங்கள் என மூன்று கட்டம் கட்டமாகத் திட்டமிட்டு செயல் வடிவங் கொடுப்பதாக கூறினார்.

முதலாம் கட்டத்தில் 355 ஏக்கரும், இரண்டாம் கட்டத்தில் 350 ஏக்கரும், மூன்றாம் கட் டத்தில் 750 ஏக்கரிலும் புனருத்தாரணம் செய்து உற்பத்திகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

முதல் கட்டத்தின் புனர்நிர்மாண வேலைக்கு அரசாங்கம் ரூபா 120 மில்லியன் ஒதுக்கியுள்ளது. உற்பத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் உப்பு அறுவடை செய்யப்படும். கிட்டத்தட்ட 8 000 தொடக்கம் 10 000 மெற்றிக் தொன் உப்பு சிறுபோகத்தில் கிடைக்கும் எனக் கூறினார்.

இரண்டாம் கட்ட வேலையில் 350 ஏக்கர் நிலப் பரப்பில் உப்பு உற்பத்தி வேலைகளை ஆரம்பிப்பதற்கு என 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 80 மில்லியன் ஒதுக்கப்பட்டதாக மாந்தை சோல்ட் லிமிட்டடின் தலைவர் அமீன் மீரா தெரிவித்தார். இரண்டாம் கட்ட வேலைகள் முடிவடைந்து, 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதல் உப்பு உற்பத்தி அறுவடை செய்யப்படும் என்றார். கிட்டத்தட்ட முப்பதாயிரம் தொடக்கம் முப்பத்திரண்டாயிரம் மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

மூன்றாம் கட்ட உப்பு உற்பத்தி வேலைகள் குறிஞ்சாத் தீவிலுள்ள 750 ஏக்கர் நிலப்பரப்பில் நடைபெறும் என்றும் இதற்கு ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

ஆனையிறவு உப்பளத்தில் முதல் கட்டத்தில் இதுவரை பளை, ஆனையிறவு, பரந்தன் பகுதிகளைச் சேர்ந்த 35 தொழிலாளர்கள் வேலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும் ஏற்கனவே மாந்தை சோல்ட் லிமிட்டட் இன் மன்னாரில் வேலை செய்த உத்தியோகத்தர் உப் பள முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், மூடப்பட்ட செம்மணி உப்பளத்தில் வேலை செய்த ஆறு தொழிலாளர்கள் ஆனையிறவு உப்பளத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்கள் என்றும் கூறினார்.

முதலாம் கட்ட உற்பத்திக்கு 135 தொழிலாளர்கள் தேவை என்றும் அவர்கள் அறுவடை காலத்தில் தற்காலிகமாக நியிக்கப் படுவார்கள் என்றும் அமீன் மீரா தினச்செய்திக்குக் கூறினார்.

ஆனாலும் பளை, இயக்கச்சி, கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்த தொழிலாளர்கள் ஆனையிறவு உப்பளத்தில் வேலைசெய்ய விரும்பினால் அவர்களுக்கும் முன்னுரிமை வழங்குவதாக கூறினார்.

மாந்தை சோல்ட் லிமிட்டட் இன் கீழ் செம்மணியிலும், கல்லுண்டாயிலும் இரண்டு சிறிய உப்பளங்கள் உள்ளன என்றும் கூறினார்.

கல்லுண்டாய் உப்பளத்தின் உப்பள வளவில் யாழ்ப்பாண மாநகர சபை குப்பைகளை கொட்டி வருவதால் உப்பளம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாகவும் குப்பைகளை அகற்றி உற்பத்தி செய்வதற்கு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறினார்.

அதேநேரம் செம்மணியில் 60 ஏக்கரில் உப்பளம் இருந்தது என்றும் கடல் வாவி நீரில் உப்புத் தன்மை குறைந்து வருவதாகவும் அதனால் உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டதாகவும் அமீன் மீரா கூறினார். அதையடுத்து இந்த 60 ஏக்கர் நிலத்தையும் இறால் போன்ற உற்பத்திகளுக்கு தனியாருக்கு விடுவதென்று தீர்மானித்து இதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் அந்தக் குழுவின் அறிக்கையையடுத்து உப்பு உற்பத்தி குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

அதுமாத்திரமன்றி வடபகுதியில் பூநகரி, நல்லூர் பிரதேசம், மாந்தை மேற்கு பிரதேசம், முல்லைத்தீவு – முள்ளி வாய்க்கால், சங்குப்பிட்டி – தனங்கிழப்புப் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் உப்பு உற்பத்தி செய்வதற்கு அரச காணிகள் உள்ளன என்றும் இங்கே உப்பு உற்பத்தி செய்வதற்கு வடமாகாண சபை அனுமதி வழங்கவேண்டும் என்றும் இதை மாந்தை உப்பு உற்பத்தி நிறுவனத்திடம் வழங்கினால் சிறந்தது என்றும் கூறினார்.


புத்தளம், அம்பாந் தோட்டை, திருகோணமலை பிர தேசத்து உப்பளங்கள் எல்லாம் தனியார் உப்பளங்கள் என்றும் அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள் என்றும் சுட்டிக் காட்டினார்.

முன்னர் ஆனையிறவு உப்பளத்தில் வேலைசெய்த தொழிலாளர்கள் தங்குமிடக் கட்டடங்களை மீண்டும் இராணுவத்தினர் தங்களுக்கு கையளித்து விட்டதாக வும், அங்கே தற்சமயம் தொழிலாளர்களும், உத்தியோகத்தினரும் தங்கி வருகிறார்கள். அதையடுத்து ரூபா 40 மில்லியன் செலவில் நிர்வாகக் கட்டிடம், தொழிலாளர் தங்குமிடம், மலசலகூட வசதிகள் மற்றும் வாகனம் நிறுக்கும் தராசு பீடம் என்பனவும் கட்டப்பட்டவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மூன்றாம் கட்ட குறிஞ்சாதீவு உப்பள வேலைகள் ஆரம்பித்தவுடன் பரந்தன் இரசாயன தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு அங்கே உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டால் அங்கே உற்பத்தி செய்யும் கொஸ்டிக் சோடா, குளோரின், கந்தக அமிலம் ஆகியவற்றுக்குத் தேவையான உப்பை இங்கிருந்து பெற முடியும் என்றும் கூறினார்.

# தமிழக தேர்தலில் தி.மு.க வெற்றி பெறும்

# இது தினச்செய்தியின் கருத்துகணிப்பு



தமிழ்நாட்டுத்தேர்தல் களைகட்டி விட்டது. எதிர்வரும் 16ம் திகதி வாக்களிப்பு நடைபெறவிருக்கின்றது. 19ம் திகதி வாக்குகள் எண்ணப்படும். எந்தக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் என்ற அன்று தெரிந்துவிடும்.

இம் முறை தேர்தலில் போட்டியிடும் மூன்று முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களும் வயது முதிர்வு பெற்றும் ஆரோக்கியக் குறைவாலும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தி.மு.க தலைவர் மு.கருணாநிதி 93 வயதை எட்டிப் பிடித்துள்ளார். நடக்கமுடியாமல் எழுந்திருக்க முடியாமல் தடுமாறுகிறார். இருந்த போதிலும் ஆறாவது முறையாகவும் தானே முதல்வராக வரவேண்டும் என்று தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். தனக்கு ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் தான் தனது மகன் ஸ்டாலின் முதலமைச்சராவார் என கருணாநிதி சில பேட்டிகளில் கூறியுள்ளார்.

இன்று ஆட்சியிலிருக்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைவி செல்வி ஜெயலலிதாவினால் நின்றபடி பேச முடியவில்லை. அதே போலவே தேசிய முற்போக்குக் கட்சியின் தலைவர் விஜயகாந்தால் பிறர் உதவியின்றி நடக்க முடியவில்லை இது தான் இன்றைய தமிழ் நாட்டின் அரசியல் நிலமையாகும். இன்றைய சூழ்நிலையில் இந்த மூன்று கட்சியில் எதோ ஒரு கட்சிதான் ஆட்சியைக் கைப்பற்றும் என்று களநிலைமையை ஆராயும் போது தெரிய வருகின்றது. இது வரையில் பல கருத்துக் கணிப்புகள் வெளியாகி விட்டன. இந்தக் கருத்துக் கணிப்பு எல்லாமே மக்களையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் குழப்பத்தில் தள்ளியதே தவிர இதுவரையில் சரியான முடிவைத் தெரிவிக்கத் தவறி விட்டன என்ற தான் சொல்ல வேண்டும். ஒரு மாதத்திற்கு முன்னர் தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரின் வெற்றி வாய்ப்புக்கள் மிகவும் பிரகாசமாக இருந்தன. ஆனால் இன்று அவரின் நிலமை ஆட்டங் காணப்படுகிறது. தி.மு.க வுக்கும் அ.தி.மு.க வுக்கும் இடையில் பலத்த போட்டி நிலவு கின்றது. என்ன தான் இருந்தாலும் 235 உறுப்பினரைக் கொண்ட தமிழ் நாட்டு சட்ட சபையில் 234 பேர் தேர்தல் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். ஒருவர் அம்பலோ இந்தியன் பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

| போட்டியிடும் கட்சிகள் | வெற்றி பெறும் ஆசனங்கள் |
|---|---|
| தி.மு.க | 124 |
| அ.தி.மு.க | 51 |
| காங்கிரஸ் | 32 |
| ஏனைய அரசியல் கட்சிகள் | 6 |
| பா.ஜ.க | 4 |
| பா.ம.க | 6 |
| தே.தி.மு.க வும் அதன் கூட்டணியும் | 11 |



இம்முறைத் தேர்தலில் இதுவரை தினச்செய்தி மேற்கொண்ட கணிப்பீட்டின் படி 124 தொகுதிகளில் தி.மு.க வெல்லும் என்றும், 51 தொகுதிகளில் அ.இஅ.தி.மு.க வெற்றி பெறும் என்றும், 32 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெறும். பா.ஜ.க 4 தொகுதிகளில் வெல்ல வாய்ப்பிருக்கிறது. 12 தொகுதிகளில் தே.மு.தி.க, வைகோவின் ம.தி.மு.க, கொம்யூனிஸ்ட் கட்சிகளும் வெற்றி பெறலாம். ஏனைய அரசியல் கட்சிகள்6 தொகுதிகளில் என்று எதிர்பார்க்கப்படுகிறது

# உலகவலம்



### டாக்கா,

பங்களாதேஷில் பல்வேறு பகுதிகளில் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. டாக்கா உள்பட 14 மாவட்டங்களில் மின்னல் தாக்கியதில் சுமார் 35 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதில் அதிகமாக விளையாட்டு மைதானத்தில் விளையாடிய சிறுவர்கள் வேலையில் இருந்த பெண்களே உயிரிழந்து உள்ளனர்

### தென் ஆபிரிக்கா

தென் ஆபிரிக்கா , மொரிஷியஸ் கடற்கரைப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள விமானப் பாகங்கள், காணாமல் போன மலேஷிய எயார்லைன்ஸின் MH370 விமானத்தின் பாகங்களாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் தென்படுவதாக மலேஷிய , அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி மலேசியத் தலைநகர் கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சீனத் தலைநகர் பீஜிங்கை நோக்கி, 227 பயணிகளுடனும் 12 மலேசிய விமானப் பணியாளர்களுடனும் பயணித்த ஆர்370 விமானம் காணாமல் போனது. இதைத் தொடர்ந்து காணாமல்போன விமானத்தைக் கண்டறியும் முயற்சியில் மலேஷியா , அவுஸ்திரேலியா ஆகியவற்றுடன் இணைந்து பல நாடுகளும் ஈடுபட்டிருந்தன.

### தாய்வான்

வட கிழக்கு தாய்வானில் 5.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக, அமெரிக்க புவிச்சரிதவியல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.இது தொடர்பில் அமெரிக்க புவிச்சரிதவியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்தியில், உள்ளூர் நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை காலை 11.17 மணியளவில் தாய்வான் தலைநகர் தைப்பேயில் இருந்து 60 கிலோமீற்றர் தொலைவில் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள கரையோரப் பகுதியில் உள்ள Suao நகரில், 10 கிலோமீற்றர் ஆழத்திலேயே இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி; டிறம்பும் முன்னிலையில்



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி, ஜனாநாயகக் கட்சி ஆகியவற்றின் முன்னணி வேட்பாளர்களான டொனால்ட் டிறம்பும், ஹிலாரி கிளின்ரனும் நவம்பரில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தம் தம் கட்சியின் சார்பில் போட்டியிடுவார்கள் என்பது 90 சதவீதம் உறுதியாகி விட்டது.

ஜனநாயகக் கட்சியின் சார்பில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 2383 பிரதிநிதிகளின் வாக்குகள் தேவை இதுவரையில் ஹிலாரி கிளின்ரன் நடைபெற்ற உட்கட்சித் தேர்தலில் 2245 வாக்குகனைப் பெற்றுள்ளார். கட்சியின் பெரும்பான்மையைப் பெறுவதற்கு ,ன்னும் 144 வாக்குகள் பெற வேண்டும். அதாவது இதுவரை தமது வாக்குகளைத் தெரிவிக்காத பிரதிநிதிகளின் 13 வாக்குகளைப் பெற வேண்டும். அனேகமாக ஜூன் மாத ஆரம்பத்தில் அவர்களின் வாக்குகளையும் பெற்று விடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது. அதேநேரத்தில் ஜனநாயகக் கட்சியில் போட்டியிட்ட பேர்னி சாண்டல் இதுவரை 1462 பிரதிநிதிகளின் வாக்குகளை பெற்றுள்ளார். எனவே எஞ்சியுள்ள பிரதிநிகளிடம் மொத்தமாக 2383 வாக்குகளைப் பெறுவது என்பது முயல் கொம்பாகும் என்று கருதப் படுகிறது.

அதேநேரத்தில் குடியரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தலில் போட்டியிடும் ஒரே ஒரு வேட்பாளர் டொனல்ட் டிறம்ப் ஆவார். இதுவரை 1131 பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெற்றுள்ளார். கட்சியின் நியமனத்தைப் பெற்று தேர்தலில் போட்டியிடுவதற்கு 1138 வாக்குகள் தேவை எனவே கட்சியின் நியமனத்தைப் பெறுவதற்கு 106 பிரதிநிதிகளின் வாக்ககளே தேவை. அதனை அவர் நடைபெறவுள்ள உட்கட்சித் தேர்லில் பெற்று விடுவார் என நம்பப்படுகிறது. டொனால்ட் டிறம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்ட ரெட் குரூஸ் 154 வாக்குகள் ஆதரவைப் பெற்று இறுதியில் போட்டியிலிருந்து விலகி விட்டார்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி:- வருட இறுதிக்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனா ரட்ண கூறியுள்ளாரே?**

**ப.ரேணுகா, வல்வெட்டித்துறை.**

பதில் :- இவ்வாறு சொல்கிறார்கள் சொல்கிறார்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள் முடிவைக் காணவில்லை.

**கேள்வி:- ஜனாதிபதி மைத்திரியின் இந்திய விஜயம் எதற்காக?**

**அ.பிரமிளா, மீசாலை.**

பதில்:- கும்பமேளாவில் கலந்து கொள்ளவும் இலங்கை சீனா உறவு பற்றி கும்மி அடிக்கவும்.

**கேள்வி:- ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை கிடைப்பதற்கு 58 நிபந்தனைகள் விதிக்கப்பட்டதே இது சாத்தியமா?**

**ம.வரதராஜன், பருத்தித்துறை.**

பதில்:- எதுமே சாத்தியம் இல்லை.

**கேள்வி:- வடகொரியாவின் அச்சுறுத்தல் அமெரிக்காவைப் பாதிக்குமா?**

**சே. ஜோன்சன், வவுனியா.**

பாதிக்கும்

**கேள்வி:- யாழ்ப்பாணத்தில் இரயிலில் சிக்கி மரணமானவர்களின் தொகை அதிகரிக்க என்ன காரணம்?**

**அ.தயாளன், மானிப்பாய்.**

பதில்:- தற்காலிக மூளைக் கோளாறு. (Temprory mental insanity)

**கேள்வி:- நல்லிணைக்க அரசின் மீது மக்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்களா?**

**அ.பிரியா, மன்னார்**

பதில்:- இதுவரை இல்லை இனி எப்படியோ தெரியாது.

**கேள்வி:- பனாமா ஆவணத்தில் மேலும் சில இலங்கையரின் பெயர் உள்ளதாம்? இனி என்ன நடக்கும்?**

**எ.மஹிந்தன், கொக்குவில்.**

பதில்:- ஒன்றுமே ஆகாது எல்லாவற்றையும் சடைந்து விடுவார்கள்.

**கேள்வி:- யாழ்ப்பாண வன்முறைகளைக் கட்டுப்படுத்தக் கொழும்பில் மாநாடு நடைபெறுகிறதாம் இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**கு.வினோதன், உடுவில்.**

பதில் :- ஏற்கனவே உயர் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் இதற்கான தீர்வை கூறிவிட்டார்.

**கேள்வி:- இலங்கையிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் வருமாறு அரசாங்கம் வருந்தி அழைக்கும் வேளையில் அகதி படகு ஒன்று அவுஸ்ரேலியா சென்றதன் நோக்கம் என்ன?**

**அ.சந்திரன், திருகோணமலை.**

பதில்:- அகதியாகச் சென்ற 12 பேரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். பொருளாதார நோக்கத்திற்காகவே சென்றனர்.

**கேள்வி:- தமிழகத்தேர்தலில் கருத்துக் கணிப்பு தாக்கத்தை ஏற்படுத்துமா?**

**ம.நிருஜன், யாழ்ப்பாணம்.**

பதில்:- எந்தத் தேர்தலிலும் கருத்துக் கணிப்பு தாக்கத்தை ஏற்படுத்தும்.

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும் .**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி, சுன்னாகம்.*

# அரசியல் ஆட்டத்தில் விளையாட்டு வீரர்கள்




ஸ்ரீசாந்த்



பாய்ச்சங் பூட்டியா



ஜோதிர்மயீ சிக்தர்




இந்திய அரசியலில் சினிமாவின் ஆதிக்கம் மிக அதிகமாக உள்ளது. விளையாட்டு வீரர்களும் அரசியலில் தமது செல்வாக்கை வெளிப்படுத்தினார்கள். தமிழகம், கேரளா, புதுச்சேரி, மேற்கு வங்கம் அஸாம் ஆகிய ஐந்து மாநிலத் தேர்தல் தற்பொழுது நடைபெறுகிறது. தமது கட்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அரசியல் கட்சிகள் ரசிகர்களின் அபிமானம் பெற்ற விளையாட்டு வீரர்களை களம் இறக்கி உள்ளது. சித்து, அசார் ஆகியோர் முன்னர் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். தற்பொழுது சச்சின் டெண்டுல்கர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். கிரிக்கெற் வீரர்களான ஸ்ரீகாந்த், லக்ஷ்மி ரத்தன் சுக்லா, உதை பந்தாட்ட வீரரான பாய்ச்சங் பூட்டியா, தடகள வீராங்கனையான ஜோதிர்மயி சிக்தர் ஆகியோர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். கேரளா சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியின் சார்பில் ஸ்ரீசாந்த் போட்டியிடுகிறார். வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீசாந்த் மீது அதிக எதிர் பார்ப்பு உள்ளது. ஆறாவது ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் அணிக்காக விளையாடிய ஸ்ரீசாந்த் சூதாட்ட புகாரில் குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டார்.




டெல்லி உயர் நீதிமன்றம் அவர் மீது குற்றம் இல்லை எனக் கூறி விடுதலை செய்தது. ஆனால், இந்திய கிரிக்கெட் சபை ஸ்ரீசாந்துக்கு வாழ்நாள் தடை விதித்து அவருடைய கிரிக்கெற் வாழ்க்கையை குழி தோண்டிப் புதைத்துவிட்டது. நீதிமன்றம் ஸ்ரீசாந்தை விடுதலை செய்தும் இந்திய கிரிக்கெற் சபை அவரை முடக்கி வைத்திருக்கிறது. அந்தப் பாதிப்பிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வந்த ஸ்ரீசாந்த் தேர்தலில் வெற்றி பெற்று புகழின் உச்சத்துக்குச் செல்வார் என அவரது ரசிகர்கள் கூறுகின்றனர். இந்திய உதை பந்தாட்ட அணியின் முன் னாள் தலைவரான பாய்ச்சங் பூட்டியா இந் திய உதைபந்தாட்ட அணிக்கு பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்தவர். மேற்கு வங்கத்திலுள்ள சிலிகுரி தொகுதியில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் டார்லிங் தொகுதியில் போட்டியிட்டு பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளர் சுரிந்தர் சிங்கிடம் தோல்வியடைந்தார். சிபிஎம் கட்சியின் மூத்த தலைவர் அசோக் பட்டாச்சாரியவை எதிர்த்துப் போட்டி யிடுகிறார். சிலிகுரி தொகுதியில் அசோக் பட்டாச்சாரியா தொடர்ந்து நான்கு முறை வெற்றி பெற்றவர். ஆகை யினால் பூட்டியாவின் பாய்ச்சல் பலிக் காது என்ற கருத்து உள்ளது. தடகள வீராங்கனையான ஜோதிர்மயி சிக்தர் ஆசிய போட்டிகளில் தங்கம் வென்றவர். முன்னாள் நாடாளுமன்ற

**- வர்மா -**

உறுப் பினரான இவர் மேற்கு வங்க சோனப்பூர் வடக்கு தொகுதியில் சிபிஎம் கட்சி வேட்பாளராக போட்டியிடுகிறார். கிரிக்கெற் வீரரான லக்ஷ்மி ரத்தன் சுக்லா கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார். முதல் தர போட்டிகளில் விளையாடிய சகலதுறை வீரரான இவர் ஒருநாள் போட்டி அணியிலும் இடம் பிடித்தார். திரிணாமூல் காங்கிரஸ் சார்பில் ஹவுரா வடக்கு தொகுதியில் போட்டியிடுகிறார். உதைபந்தாட்ட வீரர்களான சையது ரகீம் நபி, திபீன்று பிஸ்வாஸ் ஆகியோரும் திரிணாமூல் காங்கிரஸ் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். தேர்தல் முடிவின் பின்னர் இவர்களுடைய அரசியல் பாதை வெளிச்சமானதா இருட்டானதா என்பது தெரிய வரும்.

# சொன்னார்கள் சொன்னார்கள்



ஜே.வி.பி யின் மீது இலங்கை மக்களுக்கு பெரும் மதிப்பும் மரியாதையும் உள்ளது. எனக்கும் அவ்வாறான நிலைப்பாடே உள்ளது. ஊழல் மோசடி விடயத்தில் தரமான தரவுகளை ஜே.வி.பி வழங்குவதாகவே நாட்டு மக்கள் நம்பினர்.இருந்தபோதிலும் கொழும்பில் நடத்திய ஊடக வியலாளர் மாநாட்டின் போதும் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அவர்கள் மீதான நம்பிக்கையை இழக்க செய்துள்ளன. என தொலைதொடர்பு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பஅமைச்சர் ஹரின் பெர்ணான்டோ குற்றம் சுமத்தினார்.



ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகையை இலங்கைக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பில் சிலர் தவறான கருத்துக்களை பரப்பி வருவதாக, அமைச்சர் சஜித்பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.



பனாமாவில் மொஸக் பொன்செகா சட்ட ஆலோசனை நிறுவனத்தின் மூலமாக, பணத்தை முதலிட்டுள்ளவர்களில்ராஜபக்ஷக்கள் இல்லைத்தானே என்று, முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.




மஹிந்த ராஜபக்ஷ ஊழல், மோசடி, திருட்டு என கறைபடிந்த சரிதை கொண்டவர். எனவே அவர் தன்னை கறைபடியாத தலைவர் எனக் கூற முடியாது.சதாம் ஹூசைன், கடாபி, ஹொஸ்னி முபாரக் போன்ற தலைவர்களும் பல கோடி ரூபாய்களை பதுக்கி வைத்து இன்று வரை அவை கண்டுபிடிக்கப்படவில்லை. இது போன்றே இலங்கையின் சட்டங்களில் சிக்கிக் கொள்ளாத வண்ணம் மிகவும் சூட்சுமமாக மஹிந்த ராஜபக்ஷ நாட்டிலிருந்து பணத்தை வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ளார் என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலே அமைச்சரவை பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரத்தன தெரிவித்தார்.



எதிர்வரும் 18ம் திகதி யுத்தத்தால் உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த தயாராகி வருவதாக, வட மாகாண சபை உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.




சினிமாவிலிருந்து ஓய்வெடுக்கப் போவதாக நான் ஒருபோதும் சொல்லவில்லை. அதிகப் படங்களில் நடிக்காமல், தேர்ந்தெடுத்து நிதானமாக நடிக்கப் போகிறேன் என்றுதான் சொன்னேன். அது புரியாமல் எனக்கு ஓய்வு கொடுத்துவிட்டன பத்திரிகைள் என்கிறார் தெறி, 24 ஆகிய தமிழ்ப் படங்கள் நடித்த நடிகை சமந்தா.



அமெரிக்காவுக்குள் நுழைய முஸ்லிம்களுக்கு தற்காலிக தடை விதிக்கப்படும் என நான் கூறியிருந்தாலும் லண்டன் மேயருக்கு மட்டும் விலக்கு அளிப்பேன். எல்லா விஷயங்களிலும் விதிவிலக்கு இருக்கும்தானே. அப்படித்தான் லண்டன் மேயருக்கு அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதி அளிப்பதும்" என்று டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.



தமிழக சட்டசபை தேர்தலில் மீண்டும் என்னை வெற்றிபெற செய்தால் உங்களுக்காக என்றும் உழைப்பேன், உயிருள்ளவரை பாடுபடுவேன் என திமுக தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.



திமுக, அதிமுக ஊழல் கூட்டணி நாங்கள் தான் மக்கள் நலக் கூட்டணி. வேஷ்டி கட்டிய தமிழக முதல்வர் ஜெயலலிதா. சேலை கட்டிய திமுக தலைவர் கருணாநிதி என்று விமர்சனம் செய்தார் விஜயகாந்த்.



யாழ் குடாநாட்டில் வாள்வெட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் குழுக்களை கைது செய்வதற்கு அதிடிப்படையைக் களத்தில் இறக்குமாறு யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நீதிபதி இளஞ்செழியன் பணிப்புரை பிறப்பித்துள்ளார்.




சர்வதேச புலனாய்வு ஊடகவியலாளர்களின் அமைப்பு வெளியிட்ட பனாமா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையர்களின் விலாசங்களுக்கு கடிதங்களை அனுப்பி விளக்கம் கோரப்படும்.14 நாட்களுக்குள் நியாயமான பதில் கிடைக்காது போனால், பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் ஊடாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என . நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

## அங்கும் இங்கும்

# மொத்தம் 31 விரல்கள்

சில மனிதர்களுக்கு ஒன்றிரண்டு விரல்கள் அதிகமாக இருப்பதுண்டு. ஹாங்காங்கில் வசிக்கும் ஸொவ் செங்லினின் மகன் பிறக்கும்போதே அளவுக்கு அதிகமான விரல்களுடன் பிறந்தான். கால்களில் 16 விரல்களும் கைகளில் 15 விரல்களும் இருக்கின்றன. தொழிற்சாலையில் வேலை செய்யும் ஸொவ், "என் மகனுக்கு மொத்தம் 31 விரல்கள் இருக்கின்றன. ஒன்றிரண்டு விரல்கள் என்றால் சமாளித்துவிடலாம். பெரிய பிரச்சினை வராது. மருத்துவர்களைச் சந்தித்தோம். 6வது மாதத்தில் இருந்து 12வது மாதத்துக்குள் குழந்தைக்குத் தொடர்ந்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறிவிட்டனர். இதற்கு 50 லட்சம் ரூபாய் செலவாகும். தொழிற்சாலையில் வேலை செய்யும் எங்களால்எப்படிப்பணத்தைக்கொடுக்க முடியும்? அறக்கட்டளைகளிடம் நன் கொடை பெற்றுதான், ஒவ்வொரு அறுவை சிகிச்சையும் செய்ய முடிவு எடுத்திருக்கிறேன்" என்கிறார் ஸொவ்.



# உலக நாயகன் கமல்

இந்தியத் திரைப்படத்துறையில், குழந்தை நட்சத்திரமாக களத்தூர் கண்ணம்மாவில் அறிமுகமாகி, தனது ஈடுஇணையற்ற நடிப்புத் திறமையைவெளிப்படுத்தி, உலகநாயகன் என்று போற்றப்படும் கமல்ஹாசன் இருநூற்றுக்கும் மேற்பட்ட இந்திய திரைப்படங்களில் நடித்துள்ளார்.தனது வாழ்க்கை முழுவதையும் திரைத்துறைக்கே அர்பணித்த திறமையான நடிகர்களுள் ஒருவராவார். நான்கு முறை தேசிய விருதும், பதினெட்டுமுறை ஃபிலிம்ஃபேர் விருதும் பெற்றவர். கமல்ஹாசன், தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்திலிருக்கும் பரமக்குடியில் குற்றவியல் வழக்கறிஞராக இருந்த டி.சீனிவாசனுக்கும்,ராஜலக்ஷ்மிக்கும் மகனாக பிறந்தார். நான்கு குழந்தைகளில், கடைக்குட்டியாகப் பிறந்த கமலுக்கு, இளம் வயதிலிருந்தே, படிப்பைத் தவிரமற்ற கலைகளில் ஆர்வம் அதிகமிருந்ததால்,



மிகுதியான நேரத்தை அதில் செலவிட்டார். சாருஹாசன், சந்திரஹாசன், மற்றும் நளினி ரகு இவருடையஉடன் பிறந்தவர்கள். கமலின் தந்தை, கட்டுப்பாடு மிகுந்தவராக இருந்ததால், தனது மகன்களை நன்குப் படிக்க வைக்க எண்ணினார். அவரின்எண்ணத்திற்கேற்ப, கமலின் மூத்த சகோதரர்கள் இருவரும் தனது தந்தையை உதாரணமாகக் கொண்டு, சட்டம் பயின்றனர்.

### திரையுலக வாழ்க்கை

தனது திரையுலக வாழ்க்கையை, ஒரு குழந்தை நட்சத்திரமாகத் தொடங்கிய கமல்ஹாசன் , தீவிர நாடகக் கலைஞராகவும் இருந்துவருகிறார். 1960ல் வெளியான களத்தூர் கண்ணம்மா திரைப்படத்தில் முதன்முதலில் அறிமுகமான போது, அவருக்கு வயது ஆறு. அத்திரைப்படத்தின் சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான இந்திய தேசிய விருதைப் பெற்றார். குழந்தை நட்சத்திரமாகப் பல திரைப்படங்களில் நடித்தஇவர், ஒரு இளைஞனாக, 1970ல் வெளியான மாணவன் என்ற திரைப்படத்தில் ஒரு பாடலில் மட்டும் தோன்றினார்.1973ல், வெளியான கே.பாலச்சந்தரின் அரங்கேற்றம் என்ற திரைப்படம் அவருக்கு ஒரு திருப்புமுனையாக இருந்தது. துணைக்கதாபாத்திரமாக பல கதைகளில் நடித்தாலும், அவர் எதிர்மறையான கதாப்பாத்திரங்களில் நடித்த சொல்லத்தான் நினைக்கிறன், குமாஸ்தாவின்மகள் போன்ற திரைப்படங்கள் பெரிதும் பேசப்பட்டவை. 1974ல் வெளிவந்த, நான் அவன் இல்லை திரைப்படமே அவர் துணைக் கதாப்பாத்திரத்தில்நடித்த கடைசித் திரைப்படமாகும்.

1974ல் வெளியான கன்னியாகுமரி என்ற மலையாளப் படம் மூலமாக கதாநாயகனாக உருவெடுத்தார். இந்தப் படம் அவருக்கு அம்மொழிக்கானஃபிலிம்ஃபேர் விருதினைப் பெற்றுத் தந்தது.

தமிழ்த் திரையுலகில் நாயகனாக அவர் அறிமுகமாகிய முதல் படம், கே.பாலச்சந்தர் இயக்கிய அபூர்வ ராகங்கள். இப்படத்திற்காக, அவருக்குஃபிலிம்ஃபேர் விருதும், தேசிய விருதும் கிடைத்தது. 1970களில், ரஜினிகாந்த்தும், கமல்ஹாசனும் பல திரைப்படங்களில் இணைந்து நடித்தனர். 16வயதினிலே, மூன்று முடிச்சு அவர்கள், இளமை ஊஞ்சல் ஆடுகிறது போன்ற திரைப்படங்கள் அவ்விருவரின் கூட்டணிக்கு நல்ல எடுத்துக்காட்டு.பின்னர், தொடர்ந்து வெற்றிப் படங்களான சிகப்பு ரோஜாக்கள், வருமையின் நிறம் சிகப்பு, நீயா, கல்யாண ராமன், நினைத்தாலே இனிக்கும், ராஜபார்வை, மூன்றாம் பிறை ஆகிய படங்கள் இவருக்குப் பல விருதுகளைத் தேடித்தந்தது.

அதே சமயத்தில், அவர் ஹிந்தித் திரையுலகிலும் கவனம் செலுத்தினார். ஏக் துஜே கே லியே, சாகர் ராஜ் திலக், கிரஃப்தார் ஆகிய திரைப்படங்கள்அவர் நடித்த ஹிந்தி திரைப்படங்களில் சில. 1990களில் வெளியான அபூர்வ சகோதர்கள், குணா, தேவர் மகன், மகாநதி, குருதிப்புனல், இந்தியன், அவ்வை ஷண்முகி போன்ற படங்கள், வெற்றிகரமான பாக்ஸ் ஆஃபிஸ் திரைப்படங்களாக உருவெடுத்தன. 1990ல், அவரின் அற்புதமான நடிப்புத்திறமைக்காக, இந்திய அரசு அவருக்கு மிக உயரிய விருதான பத்மஸ்ரீ விருதை வழங்கியது. அன்று முதல், இவர் பத்மஸ்ரீ கமல்ஹாசன் என்றும்அழைக்கப்படுகிறார்.

இரண்டு ஆண்டுகள் நீண்ட இடைவெளிக்குப்பின் வெளியான திரைப்படம், ஹே ராம் இது அவருடைய சொந்தத் தயாரிப்பான ராஜ்கமல் படநிறுவனத்தின் படைப்பாகும். அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரஸ், இந்த படத்திற்குத் தடை விதித்தாலும், இப்படம் பெருமளவு




வெற்றியைஅடைந்தது. பின்னர், தெனாலி, பம்மல் கே. சம்பந்தம், பஞ்சதந்திரம், வசூல் ராஜா MBBS போன்ற திரைப்படங்கள் அவருடைய நகைச்சுவைஉணர்வுக்காகப் பெரிதும் பேசப்பட்டவை. கௌதம் மேனன் இயக்கத்தில் வெளியான வேட்டையாடு விளையாடு, கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில்வெளிவந்த தசாவதாரம் உலகளவில் பெரும் வெற்றியைத் தேடித்தந்தது. அண்மையில் அவர் நடித்து, இயக்கி தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தியில்வெளியான விஸ்வரூபம் பாக்ஸ் ஆஃபிஸில் வெற்றிப் பெற்று வெளிவந்த சில நாட்களிலேயே 120 கோடி வருவாயை ஈட்டியுள்ளது.

நடிப்பைத் தவிர, அவர் பல படங்களுக்கு, பாடல்களும் எழுதியிருக்கிறார். மேலும், தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், மற்றும் ஆங்கிலத்தில்எழுபதுக்கும் மேற்பட்டப் பாடல்களைப் பாடியும் உள்ளார். திறமைசாலியான கமல்ஹாசன் அவர்கள், பரதநாட்டிய கலைஞர் என்பதால், பலபடங்களுக்கு நடனக்கலைஞராகவும் இருந்துள்ளார்.



### இலக்கிய படைப்புகள்

தமிழ் இலக்கியத்தில் அவருக்கு இருக்கும் ஆர்வத்தாலும், எழுத்துத் திறனாலும் மையம் என்ற பத்திரிக்கையை இயக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.இவ்விதழைக்கமல்ஹாசன் நற்பணி மன்றம் இயக்கி வருகிறது. தனது ரசிகர் சங்கம் மூலமாக, சினிமா, குழந்தை வசவு, காஷ்மீர் மோதல், போதைமருந்துப் போன்ற சமுதாயப் பிரச்சனைகளை, தனது புத்தகமான தேடித் தீர்ப்போம் வா என்ற தலைப்பில் சேகரித்து வெளியிட்டார்.

### பொதுநலப் பணிகள்

கமல் நற்பணி இலக்கியம் என்ற அமைப்பின் கீழ் பல சமுதாயப் பொது நல அமைப்புகள் அமைத்து சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறார்கள், அவரதுரசிகர்கள். ஏழை எளியோருக்கு உதவுவது, பள்ளிக் குழந்தைகளுக்குப் புத்தகம், கணினிப் போன்றவற்றை வழங்குவது போன்ற நற்பணிகளும்செய்கிறார்கள். ஹ்ருதயராகம் 2010 என்ற திட்டத்தின் தூதராக இருந்த அவர், எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதன் பொருட்டாக ஒருஅனாதை இல்லத்தை அமைத்தார். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரண நிதித் திரட்டி, சென்னை போஷரூரிலிருக்கும் ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில், செப்டம்பர் 2010ஆம் ஆண்டு வழங்கினார்.இவர் சில திரைப்படங்களை இயக்கியும் உள்ளார். இவரின் மாறுபட்ட வேடங்களைக் கொண்ட நடிப்பிற்காக பரவலாக அறியப்படுகிறார். கமல்ஹாசன்4 தேசிய விருதுகள், 19 பிலிம்பேர் விருதுகள் உள்ளடங்கலாக பல இந்திய விருதுகளை வென்றுள்ளார், இவர் சிறந்த பிறமொழிப்படத்திற்கான அகாதமிவிருதிற்கு இந்தியாவிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட திரைப்படங்களில் அதிகமானவற்றிலும் நடித்திருந்தார். நடிகராக மட்டுமல்லாதுதிரைக்கதையாசிரியர், இயக்குநர், பாடலாசிரியர், பின்னணிப்பாடகர், நடன அமைப்பாளர் எனப் பன்முகத்தன்மை கொண்டவராக விளங்குகின்றார். ஐஇந்திய திரைத்துறைக்கு ஆற்றிய பணிக்காக பத்மசிறீ விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சத்தியபாமா பல்கலைக்கழகம்கமல்ஹாசனிற்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கி கௌரவித்தது. 2009 இல் 50 ஆண்டுகளை திரைத்துறையில் நிறைவுசெய்த இந்திய நடிகர்கள்மிகச்சிலரில் ஒருவரானார்.

கமல்ஹாசன், தமிழ் தவிர இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், வங்காளம் ஆகிய மொழித் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். ராஜ்கமல்பிலிம்ஸ் என்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நடத்தி வருகின்றார்.

### இல்லற வாழ்க்கை

1978ல், வாணி கணபதி என்பவரை மணமுடித்த கமல்ஹாசன், பத்து ஆண்டுகள் கழித்து அவரிடம் விவாஹரத்துப் பெற்று, சரிகா என்ற நடிகையைமணமுடித்தார். அவர்களுக்கு, ஷ்ருதி ஹாசன் மற்றும் அக்ஷரா என்ற மகள்கள் உள்ளனர்.பின்னர், சிம்ரனுடனான தொடர்பின் காரணமாக, சரிகா கமலிடம் விவாஹரத்துக் கோரினார். 2002ல் சரிகாவுடனான உறவிலிருந்து விடுதலைப் பெற்ற பின், 2005லிருந்து கௌதமியுடன் இணைந்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்.

### விருதுகள்

சிறந்த நடிப்பிற்காக மூன்றாம்பிறை, நாயகன், இந்தியன் போன்ற படங்களுக்காக இந்திய அரசின் தேசிய விருதுகளைப் பெற்றார்.சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்காக இந்திய தேசிய விருது அவரது முதல் படமான களத்தூர் கண்ணம்மாவிற்காக வழங்கப்பட்டது.18 முறை ஃபிலிம்பேர் விருதுகள் பெற்ற பெருமை, கமல்ஹாச னையே சேரும்.1990ல், பத்மசிறீ விருது பெற்றார்.2005ல், சத்யபாமா நிகர்நிலை பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

### முக்கியமான திரைப்படங்கள்

கமல்ஹாசன் அவர்களின், திரையுலக வரலாற்றில் பெரிதும் பேசப்பட்டத் திரைப்படங்களுள் சில

களத்தூர் கண்ணம்மா, 16 வயதினிலே, மூன்றாம் பிறை, நாயகன், அபூர்வ சகோதரர்கள், மைக்கேல் மதன காமராஜன், குணா, மகாநதி, தேவர் மகன், இந்தியன், அவ்வை சண்முகி,ஆளவந்தான், தெனாலி, தசாவதாரம்



# அலன் தம்பதியினரைக் கடத்திய ஈ.பி.ஆர் எல்.எப்.

முதன் முதலாக 23 மார்ச் 1974 ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தேசிய பாதுகாப்புக்கு என்று ஒரு அமைச்சை உருவாக்கினார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற சட்டத்தரணியான அன்றைய வர்த் தக மற்றும் கப்பல் துறைக்கு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியிடம் பொறுப்பு வழங்கப்பட்டது. அவ்வாறு தேசிய பாதுகாப்பு அமைச்சு உருவாக்கப்பட்டதையடுத்து முதன் முதலாக அமைச்சர் அத்துலத் முதலி இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் வந்தார்.

அவர் வந்து அரைமணித்தியாலத்திற்கிடையே தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைத் தாக்கினார்கள். அந்தத் தாக்குதலின் போது 1 பொலிஸ் சார்ஜன்டும் 2 பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

அதையடுத்து இரண்டு நாட்கள் கழித்து தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் ஒரு பொலிஸைச் சுட்டுக் கொன்றார்கள்.

தங்கள் கடமை முடிந்து தங்குமிடத்திற்குச் சென்று கொண்டிருந்த இலங்கை விமானப்படை சிப்பாய்களை வழிமறித்து தமிழீழ விடுதலைப் புலி கள் தாக்கினார்கள். பொதுவாகவே இலங்கை விமானப் படையினர் நேரடியாக பொது மக்களுடனோ, போராளிகளுடனோ எந்த ஒரு வன்முறையிலும் ஈடுபடாமல் இருந்தார்கள். முதன் முதலாக 28 மார்ச் 1984 ஆம் ஆண்டு அவர்களில் ஒரு கோஷ்டியினர் இரண்டு மூன்று வாகனங்களில் வந்து சுன்னாகம் பொதுச் சந்தைக்குள் நுழைந்து ஆட்களைத் தாக்கத் தொடங்கினார்கள்.

அன்று பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த சுன்னாகம் பொதுச் சந்தையில் ஒன்பது பொதுமக்கள் இறந்தார்கள். சுன்னாகம் பொதுச் சந்தையில் வரிக்குப் பொறுப்பாக இருந்தவர் இத் துப்பாக்கிச் சம்பவத்தைக் கண்ணுற்றதையடுத்து இருதய கோளாறினால் ஸ்தலத்திலேயே இறந்தார் என்று பின்னர் அறியப்பட்டது.

இத் துப்பாக்கிச் சூடு நடைபெறுகின்ற சமயம் இந்த எழுத்தாளர் அங்கே நின்று இக் கொடூரத்தைப் பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதாக இங்கு குறிப் பிட் டுக் கொள்கின்றார்.

இவ் வா று பொது மக்கள் கொல் லப் படுவதற்கு இந்திய அரசு தனது எதிர்ப் பையும், ஆட் சேபத்தையும் இலங்கை அரசாங்கத்திற்குத் தெரிவித்தது.

இந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகக் கொடூர யுத்தம் நடைபெற்றது. மக்கள் தங்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு நடமாடினார்கள். மாலை நான்கு மணிக்கே தங்கள் வீடுகளில் சென்று பதுங்கிக் கொள்வார்கள். இரவு நேரத்தில் இராணுவ வாகனத்தைத் தவிர வேறு எந்த போக்குவரத்தும் நடைபெறுவதில்லை.

ஏப்ரல் மாதம் முதல் கிழமையில் இராணுவ அணியொன்று வீதியில் சென்று கொண்டிருக்கும் போது



தேவாலயத்திற்கு முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தில் குண்டு வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் வெடிக்கச் செய்தார்கள். இக் குண்டு வெடிப்பு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து ஏப்ரல் 10 ஆம் திகதி பாதுகாப்புப் படையினர் ஐந்து அப்பாவித் தமிழர்களை சுட்டுக் கொன்றார்கள்.

அது மாத்திரமல்லாது, பாதுகாப்புப் படையினர் வீதியால் சென்ற பல வாகனங்களை குண்டு வைத்துத் தகர்த்தார்கள். இத் தாக்குதலுக்கு எதிராக நூற்றுக் கணக்கான பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்த புத்தகோயிலையும், யாழ்ப்பாண இரயில் நிலையத்திற்கு பின் பக்கத்தில் இருந்த சிங்களப் பாடசாலையையும் தமிழீழ விடுதலைப் புலிகள் குண்டு வைத்து தாக்கி தரைமட்டமாக்கினார்கள். யாழ்ப்பாணத்தில் பரம்பரை பரம்பரையாக வர்த்தக முயற்சியில் ஈடுபட்ட சிங்களவர்களின் கடைகளுக்கும் தீ வைத்துக் கொளுத்தினர். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த வீடுகளுக்கும் தீ வைத்து கொளுத்தி அடித்து விரட்டினர்.

அந்தக் காலத்தில் யாழ். மாவட்ட அதிபராக இருந்த தேவநேசன் நேசய்யா குறிப்பிடுகையில் பாதுகாப்புப் படையினர் ஐம்பதுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை கொலை செய்தனர் என்று குறிப்பிட்டார். ஆனால் நான்கு நாட்களுக்குள் 234 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று யாழ்ப்பாண பிரஜைகள் குழு அதன் அறிக்கையில் தெரிவித்தது.

அதையடுத்து மே 10 ஆம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எப். பைச் சேர்ந்த பதினொரு ஆயுததாரிகள், அமெரிகாவின் உதவியுடன் குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்ட வேலைகளை கவனிக்க என்று வந்திருந்த அமெரிக்காவைச் சேர்ந்த புதிதாய் மண முடித்த தம்பதிகளை அவர்கள் வாழ்ந்து வந்த கடற்கரையோர வீட்டிலிருந்து கடத்திச் சென்றனர். அவ்வாறு கடத் தப்பட்ட ஸ்ரான்லி பிறைசன் அலன் வயது 30 மேரி எலிசபத் வயது 18 ஆகியோரை அமெரிக்க சி.ஐ.ஓ. என்று கடத்திய ஈ.பி. ஆர்.எல். எப். குற்றம் சுமத்தினார்கள்.

அலன் தம்பதியினர் தமது படுக்கை அறையில் வீடியோ பார்த்துக் கொண்டிருந்த பொழுது கடத்தப்பட்டனர். அக் கடத்தல் மிகவும் தெளிவாக திட்டமிட்ட முறையில் நடைபெற்றது.

இவ்வாறு கடத்துவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு தான், அவர்கள் வீட்டிற்கு சிலர் வந்து தங்கள் கிராமத்திலுள்ள வாசிகசாலைக்கு நன்கொடை தருமாறு கேட்டனர். இவ்வாறு வந்தவர்கள் ஈ.பி. ஆர்.எல்.எப். அமைப்பினரே. அவர்களை வேவு பார்க்க அனுப்பி வைத்தனர் என்று தெரிய வருகிறது. அவர்கள் தம்பதிகளின் கண், கால், கைகள் என்பவற்றை கட்டி வாகனம் ஒன்றி போட்டு முதலில் காங்கேசன்துறை கடற்கரைக்கு கொண்டு சென்றனர். அதன் பின்னர் அலன் தம்பதிகளை சுன்னாகத்திலுள்ள வீடொன் றில் அடைத்து வைத்தார்கள். மறுநாள் ஈ.பி. ஆர்.எல்.எப். இராணுவ அமைப்பான மக்கள் விடுதலை இராணுவம் அலன் தம்பதிகளை விடுதலை செய்ய வேண்டுமாயின், கைது செய்யப்பட்டு காவலில் இருக்கும் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும், ரூபா 50 மில்லியன் பெறுமதியான தங்கம் தர வேண்டும் என்றும் யாழ்ப்பாண அதிபருக்கு விலாசமிட்டு குறிப்பு அனுப்பி வைத்தார்கள்.

மேலும் அந்தக் குறிப்பில் ரூபா 50 மில்லியன் பெறுமதியான தங்கம் 14 ஆம் திகதி மே மாதம் நண்பகல் 12 மணிக்கு முன்பு தமிழ் நாட்டு அரசுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால் அலன் தம்பதிகள் சாகடிக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கையும் செய்தார்கள்.

இவ்வாறு அலன் தம்பதிகளை கடத்தும் முயற்சி, அன்றைய உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் நடந்தது. இது இந்தியாவை ஒரு பயங்கரமான நிலைக்குத் தள்ளிற்று. அதுமாத்திரமல்லாமல் அவர்கள் கூறிய ரூபா 50 மில்லியன் பெறுமதியான தங்கத்தை இந்திய அரசிடம் கையளிக்குமாறு கூறிய கோரிக்கை தமிழ் நாட்டு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனை மிகவும் கோபமடைய வைத்தது.

இக் கடத்தலுக்கும் தமிழ் நாட்டு அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று மிகவும் கடுமையான வார்த்தைப் பிரயோகம் செய்து முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் அறிக்கை வெளியிட்டார். அதனையடுத்து தமிழ் நாட்டு பொலிஸ் துறைக்குப் பொறுப்பாக இருந்த மோகன தாஸ் சென்னையிலிருந்த ஈ.பி.ஆர்.எல். எப். தலைவர்களை அழைத்து உடனடியாக அலன் தம்பதிகளை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தலைவரான பத்மநாபானை கியூ பிரிவுப் பொலிஸார் சென்னையில் வைத்து கைது செய்தனர். மேலும் “கடத்தி வைத்திருக்கும் அலன் தம்பதியினரை விடுதலை செய்யுங்கள். இக்கடத்தல் இந்தியாவிற்கு நெருக்கடியைக் கொடுக்கின்றது” என்று இந்திரா காந்தி கூறினார்.

தமிழ் நாட்டு முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் கோபத்தின் உச்சத்திற்கே சென்றார். “உலகம் எங்கும் பரந்துபட்டு வாழும் தமிழர்களின் நலன்கள் பாதிக்கப் படாமல் இருக்க வேண்டுமாயின், அலன் தம்பதியினரை உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்,” என்று கோரிக்கை விடுத்தார்.

(தொடர்ச்சி 17 இல்)

# உண்மை வெளிவருகிறது

## பகுதி -12

எவ்வாறாயினும், இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.ஸி. பந்த் அன்றைய மாலை நேரம் இலங்கை ஜனாதிபதியைச் சந்திக்க கொழும்புக்கு விரைந்தார் பலா லிக்கு வந்தார். அவருக்கு நிலைமை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. ஜென ரல் கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜியும் தனது பயணத்தைக் கொழும்புக்கு தொடர்ந் தார்.

அக்டோபர் மாதம் 8 ஆம் திகதி இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.ஸிபந்த், இந்திய இராணுவத் தளபதி கிருஷ்ணசுவாமி சுந் தர்ஜி மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் ஜே.என். டிக்ஸிற் ஆகியோர் கொழும்பில் வைத்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்தனர்.

அக்டோபர் மாதம் 9 ஆம் திகதி காலை, இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்திலுள்ள எல்.ரி.ரி.ஈ. இயக்க ஊடகம் மீது திடுதிப்பென நடவடிக்கையைத் தொடுத்தது. அதை யடுத்து சில மணிநேரத்தில் பாரிய இரா ணுவத் தாக்குதல்கள் யாழ்ப்பாணத்தில் தொடரலாயின.

ஈழமுரசு மற்றும் முரசொலி ஆகிய வற்றின் அச்சு இயந்திரங்கள் வெடிவைத்து தகர்க்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டனர். வானொலி மற் றும் தொலைக்காட்சி நிலையங்கள் தாக் கப்பட்டன. சகல ஒலி மற்றும் ஒளி பரப்புச் சாதன வசதிகளும் செயல் இழக்க வைக்கப்பட்டன.

அக்டோபர் மாதம் 9 ஆம் திகதி, இந்திய இராணுவமும் தமிழ் ஆயுதக்குழுவும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டன. இந்திய இராணும் 131க்கும் மேற்பட்ட தமிழ் ஆயுதக் குழுவினர்களை அவர்க ளின் ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற் றும் தொடர்பு சாதனங்களுடன் கைது செய்துவிட்டதாக அந்தத் தருணத்தில் செய்திகள் வெளிவந்தன.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற் கான சண்டை ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி வரை தொடர்ந்தது. திபெந்தர் சிங்கின் கூற்றுப்படி, ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்களின் விபரம் வருமாறு:

இந்திய அமைதி காக்கும் படை – 17 உயர் அதிகாரிகள், 26 கனிஷ்டதர கமிஷன்ட் அதிகாரிகள், 276 சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள். 53 உயர் அதிகாரிகள், 67 கனிஷ்டதர கமிஷன்ட் அதிகாரிகள், 919 சிப்பாய்கள் காயமுற்றார்கள்.

எல்.ரி.ரி.ஈ: 1,100 பேர் கொல்லப்பட்டார் கள்.

சண்டையில் தொடர்பில்லாத சிவிலி யன்களின் இழப்பு பற்றிய எந்தவித விப ரத்தையும் வெளியிட இந்திய அமைதி காக்கும் படையின் தளபதி தவறி விட்டார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற் கான இந்திய அமைதி காக்கும் படையின் தாக்குதல்களில் 1, 000க்கும் அதிகமான குடிமக்கள் கொல்லப்பட்டார்கள் என பல தரப்பட்ட பிரசைகள் குழுக்கள் மற் றும் உள்ளூர் மனித உரிமை குழுக் களின் அறிக்கைகள் தெரிவித்தன. கிழக்கு இலங்கையில், இரண்டு தரப் பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட கண் மூடித் தனமான அல்லது பதில் தாக்கு தல்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் கொல்லப்பட்டார்கள் என்றும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன என்றும், குற்றம் சுமத்திப்படுகிறது.

இலங்கையில், இந்திய அமைதி காக் கும் படையின் இராணுவ நடவடிக் கையானது முன்னெப்பொழுதும் இல்லாத இந்திய ராஜதந்திர மற்றும் இராணுவ படுதோல்வியாகியது. இந்த வீரதீர பலப் பீரட்சையில் பல கோடி டாலர்கள் விரய மாகின. இலங்கையில் அடைந்த இந்த படுதோல்வி பற்றி விசாரணை செய்ய பின் வந்த இந்திய அரசாங்கங்கள் பாரபட்சமற்ற ஒரு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்கத் தவறிவிட்டன.




எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்கு இனிமேல் இடமளிக்கப்படமாட்டாது என்று ஜெய வர்த்தனாவும் இந்திய பாதுகாப்பு அமைச் சர் கே.ஸி. பந்த்தும் பிரகடனப்படுத் தினார்கள்.

"இந்திய-இலங்கை உடன்படிக்கை செயல்படுத்தப்படுவதற்கு இடையூறு விளைவிக்கும் சகல வன்முறைச் சக்தி களுக்கும் எதிராக இறுக்கமான நட வடிக்கையை எடுப்பதென இந்திய அர சாங்கம் முடிவு செய்திருக்கிறது," என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.ஸி. பந்த் அறிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு இலங்கை யில் வன்முறையில் ஈடுபடும் எந்த வொரு நபரையும் கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளுமாறு அக்டோபர் மாதம் 7 ஆம் திகதி இந்திய மற்றும் இலங்கைப் படையினருக்கு ஒரு கூட்டான உத்தரவு வழங்கப்பட்டது.

இதற்கு ஏற்றாற்போல, ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி நள்ளிரவில் யுத் தம் வெடித்தபோது, யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கு சற்றுத் தூரத்திலுள்ள கொக் குவில் பிரம்படி ஒழுங்கையிலிருந்த பிரபாகரனின் தலைமையகத்தின் மீது ஆகாயமூலமாக கமாண்டோ தாக்குத லுடன் எல்.ரி.ரி.ஈ இயக்கத் தலைமையை தேடித் துடைத்தழிக்கும் நடவடிக்கையில் இந்திய அமைதி காக்கும் படை ஈடு பட்டது.

13 ஆவது சீக்கிய கலாட்படை கொமாண்டோக்கள் ஒக்டோபர் மாதம்12 ஆம் திகதி கெலிகப்ரில் வந்து இறங்க பதுங்கிக்காத்திருந்த எல்.ரி.ரி.ஈ இயக் கத் துப்பாக்கிதாரிகளின் மூர்க்கமான துப் பாக்கித் தாக்குதல்களை அவர்கள் சந் தித்தார்கள்.

முன்னெப்பொழுதுமே தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடாத மிக மூர்க்கமான இராணுவ நடவடிக்கையான 'ஒபரேஷன் பவான்' எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை நிராயுதபாணியாக்க, யாழ்ப்பாண குடாநாட்டில் நடத்தப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கையின் ஆரம்ப நாட்களில், இந்திய இராணுவத்தின் சுடு கலன், பலம் நூற்றுக்கணக்கான குடி மக்களை கொன்று குவித்தது. அங்க வீனர்களாக்கியது.

சொத்துகள் அழித்து நாசமாக்கப்பட் டன. ஆயிரக்கணக்கான குடிமக்கள் இடம்பெயர வைக்கப்பட்டனர். அவர்கள் கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் மற்றும் அரசாங்கக் கட்டிடங்களில் தஞ்ச மடைந்தனர்.

ரணசிங்க பிரேமதாஸா ஜனவரி மாதம் 2 ஆம் திகதி 1989 ஆம் ஆண்டு, புதிய ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்தார். அவர் அன்றைய தினம் கண்டி தலதா மாளிகைக்கு உட்பட்ட பகுதியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது, பேச்சுக்கு வருமாறு எல்.ரி.ரி.ஈ. இயக் கத்துக்கும், மக்கள் விடுதலை முன் னணிக்கும் (ஜே.வி.பி) அழைப்பு விடுத் தார். இனப்பிரச்சினை ஓர் உள் விவகாரம் என்றும், வெளிநாட்டுச் சக்திகளின் தலை யீடு இல்லாமல் அது தீர்க்கப்பட வேண் டியிருக்கிறது என்றும், அவர் கூறி னார். அக்கூற்று இந்தியா மீதான பலமான அடி யாக கருத வேண்டியதாக இருந்தது.

எல்.ரி.ரி.ஈ. ஆயுதக்குழுக்கள், தமது ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு பரிவர்த் தனையாக இந்திய – இலங்கை உடன் படிக்கையின் கீழ் தமிழர்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட சுயாதிபத்தியத்தை வழங்க வடக்கு – கிழக்கு மாகாண அரசாங்கம் அமைக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு மாகாண சபை எந்தவித நலனையும் தமிழர்கள் மத்தியில் உருவாக்கத் தவறிவிட்டது என்று கூறி, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் 26 ஆம் திகதி மார்ச் மாதம் 1989ஆம் ஆண்டு, வடக்கு – கிழக்கு மாகாண சபை செயல்படுவதைத் தடைசெய்து அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 25,000 அதிகமானவர்களின் உயிர்களை காவுகொண்ட இன வன்முறையை முடி வுக்குக் கொண்டுவர தனது சமாதா னத் தீர்வுப்பொதியை பிரேமதாஸ வலியு றுத்தினார்.

கொலைகளை நிறுத்தி, அரசியல் நடை முறையில் இணைந்து கொள்வார் களானால், நிபந்தனையற்ற மன்னிப்பு மற்றும் நாடாளுமன்ற ஆசனங்கள் அடங் கலாக விஸ்தாரமான பிரேச்சுக்கொண்ட தீர்வு யோசனைகளை பிரேமதாஸ தனது அரசினால் நடத்தப்படும் வானொலியில் நிகழ்த்திய உரை ஒன்றின் போது கூறி னார்.

"ஆயுதங்களுடனோ அல்லது ஆயு தங்களின்றியோ வாருங்கள். நிபந்தனை யற்றவகையில் நாங்கள் சகலரையும் ஏற் றுக் கொள்வோம்" என்று அவர் கூறி னார். ஜனாதிபதி ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தையும் வழங்கினார்.

ஜனாதிபதியின் கொழும்பிலுள்ள சுச் சரித்த மாவத்தை வாசஸ்தலத்தில் வைத்து 4 ஆம் திகதி மே மாதம் 1989 ஆண்டு பின்னேரம் அன்டன் பாலசிங்கம், அவரது மனைவி அடேல், யோகி மற்றும் மூர்த்தி ஆகியோர் அடங்கிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தூதுக்குழு முதல் தடவையாக ஜனாதிபதியைச் சந் தித்தது.

13 ஆம் திகதி ஜூலை மாதம், அமிர்தலிங்கத்தின் கொழும்பிலுள்ள இல் லத்தினுள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூவர் பிரவேசித்து, அவரைச் சுட்டுக்கொன்றனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனும் கொல்லப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் எம். சிவசிதம்பரம் படுகாயமடைந்தார்.

24 ஆம் திகதி மார்ச் மாதம் 1990 ஆம் ஆண்டு, இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக் கரையை விட்டு வெளியேறியது.

(தொடரும்)

# பொருத்து வீடுகள் பொருந்தா



முல்லையூர் மயில்ஞானன்

வருத்தத்திற்கு மருந்து எடுக்கக்கூட
உலுப்பரியாரியிடம் மட்டும்
உலுரிப்போன உள்ளங்கள்
அகதியாக போனாலும்
கௌரவத்தை விடுக்குடுக்காத கூட்டங்கள்
குடிசை என்றாலும் மாளிகை என்றாலும்
பரம்பரை பரம்பரையாக - தமிழர்
பிரதேச பண்பாட்டிற்கமைய
வாழிடமமைத்து வாழ்ந்த இனம்
தேசவழமைச்சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து
வீடுகட்டி வாழ்ந்த இனம்
அடுத்த வீட்டு தேங்காய் விழுந்து
கூரையில் வெடிப்பு வந்தாலும்
ஊருல மேசன் தச்சன் வருவான் திருத்த
இனி எங்க நாட்டில் இருந்து
யார் வரணுமோ தெரியாது

மூன்றாவது மகளும் வயசுக்கு வந்திட்டா
ஒரு அறை என்றாலும் விஸ்தரிக்கலாம்
மூத்த மகளும் பிள்ளைகளோட
இருக்க எம்வீடு வந்திட்டால் - பின்னால
ஒரு பத்தியை எண்டாலும் பாதுகாப்பாக
இருக்கபோட்டுக் கொடுக்கலாம்
உயரமும் வசதியாம் சாமியறை அளவும் சரியாம்
வாஸ்து சாஸ்திரம் பார்த்து வாசலமைத்தவர்க்கு
கழிவுக் கலவையாலான வீடுகள் - ஏன்
கள்வர் கூட்டத்திற்கும் உடைத்துப் புக
இலகுவாம் இந்த பொருத்து வீடுகள் - ச்சீ
உதவாது ஒருபோதும் எமக்கு

இரண்டாவது மகளின் சம்பந்தம்
சரிவராது போனதுக்கு - பொருத்து வீடுதான்
சீதனம் என்ற கதையை - கதிரேசுப்புரோக்கர்
காலையில் கோவிலடியில் கூறித்தான்
தெரிஞ்சுகொண்டன் - கவலை

காலம்காலமாக கூரைபோட்ட
அஸ்பெஸ்டஸ்கள் புற்றுநோய்க்கு
காரணம் என தடைசெய்ய முனைகையில்
ஏன் இந்த பொருந்தா வீடுகள் எமக்கு
ஏற்கனவே எடுத்த புள்ளிவிபரங்கள் -பல
இருக்கையில் புதுசா ஒரு படிவத்தை
அறிமுகப்படுத்தி சனத்தை உசுப்பேத்திட்டு
அமைச்சர் வேற ஆடுகிறார் நாடகம்
சனம்முண்டி அடிக்குதாம்
பொருத்து வீட்டிற்கு என - வேடிக்கை
எத்தனைபேர் வேலை வில்லட்டியள விட்டிட்டு
போம்போட போய் செலவழிச்சவை எண்டு
ஏசி றூமில உள்ளவைக்கு தெரியுமா

பூமி அதிர்ச்சியும் எரிமலை வெடிப்பும்
அடிக்கடி வரும் நாட்டிற்கு
பொருத்தமான இந்த வீடுகள்
பொருத்தமானவையல்ல என்றுமே எமக்கு
விருப்பமில்லாத எமக்கு திணிக்கப்படும்
இவ்வீடுகள்-சுவாத்தியம் வெப்பத்தை தாங்காமை
புற்றுநோய் என வழங்கலாம்
பல்வேறு உபாதைகளை - எதிர்காலத்தில்

## நானும் எனது கவிதைகளும்



என் இதயமெனும் சிறு கடலில்
உன் நினைவெனும் பெருங்கப்பல்
நங்கூரமிட்டபடி!

புராதனங்களில் இருந்து
கண்டெடுத்த கல்வெட்டாய்
என் காதல் இப்போது!
மிகவும் காரிருள் படிந்த
பொழுதொன்றில் தோன்றிய
சிறு நிலவுக் கீற்றைப் போல்
இன்று உன்
தொலைபேசி அழைப்புக்களின் நாதம்!

ஊறலும் இருட்டுமாய் இருக்கும்
அந்தி நேர உருவமாய்
நீயும் நானும்
கடைசியாய் சந்தித்துக்கொண்ட
நிமிடங்களின் நினைவுகள்!

புல்வெளிகள் ஏந்திக்கொண்ட
சிறிய பனித்துளிகள் போல்
உன் ஓரப் பார்வையை
நெஞ்சில் சுமந்தபடி
நானும் எனது கவிதைகளும்!

தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

## ஸகியே இந்த வேளையில்...



உன் கால்களில் கொஞ்சி விளையாடும்
சலங்கை இன்று ஆடப்போவது என்ன

நிருத்தமா? நாட்டியமா?நிருத்தியமா?
அன்று தாருகாவனத்தில் சிவதாண்டவம்
விஷ்ணு ஆடியது காளிங்க நர்த்தனம்
இன்று நீ ஆடப்போவது லாசிய தாண்டவமா?
ஸகியே இந்த வேளையில் நீ பலகலையும்
கற்று நாட்டியக் கலையின் சிகரத்தை எட்டிப்
பிடிக்க என் வாழ்த்துக்கள்

அடவுகளின் சேர்க்கை
நறுமணம் கொண்ட பூமாலைபோல
கோர்வைகளாகின

அலாரிப்பு எனும் விடியலின் பின்
ஸ்வரமும் ஜதியும் இணைந்தே
ஜதீஸ்வரம் ஆகியது

நாயகா நாயகி மோதும் பதவர்ணமாகியது
கோபாலனின் குறும்புத்தனம்
சப்தம் ஆகியது

தாட்ஷா, கொழும்பு

உங்கள் கவிதைகளை
அனுப்ப வேண்டிய முகவரி:
**கவி முற்றம்**
**தினச் செய்தி வாரமலர்**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.



# குறுக்கெழுத்துப் போட்டி - 2

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | |
| | ■ | | ■ | | ■ |
| ■ | 4 | ■ | 5 | ■ | 6 |
| 7 | | | ■ | 8 | |
| ■ | | ■ | 9 | ■ | ■ |
| 10 | ■ | 11 | | | |

**இடமிருந்து வலம்**

1. மழைக்கால இருட்டானாலும் இது கொப்பிழக்கத் தாவாது.
3. இதற்கும் அடி சறுக்கும்.
7. நூற்றுக்கணக்கான ஆடுகள்.
8. ஒன்றின் அரைப்பங்கு.
10. அரசன்
11. இது பிறந்தால் நியாயம் பிறக்கும்.

**மேலிருந்து கீழ்**

1. காட்டில் உள்ள மிருகம்
2. சிறு தானியம்.
3. சுவரில் அடிப்பது.
4. பொருட்கள் வாங்கும் இடம்.
5. பசு
6. நிலவு
9. அதிகம்

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் மே 25 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர் 28.05.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 2**
**தினச்செய்தி வாரமலர்,**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.



## செல்பியால் வந்த தொல்லை

விளையாட்டுத்தனமாக ஒரு செல்ஃபியை வெளியிடப் போய், தேவையற்ற சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார் ஸ்ருதி ஹாஸன். ஏற்கெனவே இவருக்கு ரகசிய திருமணம் நடந்துவிட்டது... மும்பையில் தனிக்குடித்தனம் நடத்துகிறார் என்றெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த சூழலில், சமீபத்தில் ஒரு உணவகத்துக்கு தன் நெருங்கிய நண்பரான நிரஞ்சனுடன் சென்றுள்ளார் (இவர் பாலிவுட்டில் பிரபல திரைக்கதை எழுத்தாளர்). அங்கு வைத்து இருவரும் ஒரு செல்ஃபி எடுத்துக் கொண்டனர். அதை தனது இன்ஸ்டாகிராமில் 'கேம் ஆஃப் த்ரோன் லஞ்சில் எனது அன்பு கணவருடன்' என்று தமாஷாகப் போட்டாராம். உடனே சமூக வலைத்தளங்களில் இந்த செய்தி பரவியது. ஸ்ருதிஹாஸன் தன் ரகசிய கணவருடன் இருக்கும் படம் வெளியானது என்று செய்தி போட்டுவிட்டன வலை தளங்கள். உடனே ஸ்ருதி, "யாருக்கும் நகைச்சுவை உணர்வே இல்லை. குறும்பாக நான் போட்ட படத்தை ஜாலியாக எடுத்துக் கொள்ளாமல் இப்படி இம்சை பண்ணலாமா?" என்று கடுப்பாகக் கேட்டுள்ளார்.



## விக்கிரமின் புதிய பாணி

'ஐ' படத்துக்குப் பிறகு உடம்பை வருத்திக்கொள்ளும் படங்களைக் குறைப்பதென்ற முடிவுக்கு வந்துவிட்டார் விக்ரம். இதனால் அனைத்து தரப்பையும் கவரும், குறைந்த நாட்களில் முடியும் கமர்ஷியல் படங்களாகத் தேர்வு செய்து நடித்து வருகிறார். அடுத்து 'கருடா' படத்தில் இந்தியா-பாகிஸ்தான் ஒற்றுமையை வலியுறுத்தும் கதைக்களத்தில் நடிக்கிறாராம். படத்தில் தீவிரவாதிகளைக் களையெடுக்கும் வேடத்திலும் பின்னி எடுக்கப் போகிறாராம். பாகிஸ்தானில் படப்பிடிப்பு நடத்த முடியாது என்பதால் ஓமன், நமீபியா நாடுகளில் முக்கியமான காட்சிகளை எடுக்க இருக்கிறார்களாம்.


## டாப்சிக்கு தொல்லை கொடுத்த ரசிகர்கள்



ரசிகர்களில் பல வகை இருக்கிறார்கள். சிலர் நடிகைகளுடன் 'செல்பி' எடுத்துக்கொள்ள விரும்புவார்கள். இன்னும் சிலர் 'ஆட்டோகிராப்' கேட்டு வாங்குவார்கள். மூன்றாவது ரக ரசிகர்கள் நடிகைகளை தொட்டுப்பார்க்கவும், அவர்களிடம் கைகுலுக்கவும் ஆசைப்படுவார்கள். இவர்களை தவிர இன்னொரு மோசமான வகை ரசிகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் போனில் அடிக்கடி பேசி தொந்தரவு கொடுப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு ரசிகரின் தொல்லையை நான் அனுபவித்தேன். எனது சகோதரியுடன் சேர்ந்து திருமணங்களை நடத்தி கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறேன். இதற்காக நிறைய பேர் எனக்கு போன் செய்கிறார்கள். அலுவலகத்துக்கும் பலர் இது சம்பந்தமாக போன் செய்து பேசுகிறார்கள்.

இதுமாதிரி எனக்கு ஒரு போன் வந்தது. அதில் பேசியவர் கொல்கத்தாவில் இருந்து பேசுவதாக அறிமுகப்படுத்திக்கொண்டார். தனது திருமணத்துக்கு தேவையான அனைத்து பணிகளையும் செய்து கொடுக்கும்படியும் அதற்கான கட்டணத்தை தந்து விடுவதாகவும் இந்த வேலைக்கான ஒப்பந்தத்தை எனது நிறுவனத்துக்கு வழங்க வேண்டும் என்றால் நான் அவரது திருமணத்துக்கு சிறப்பு விருந்தினராக நேரில் வர வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். நான் மறுத்து விட்டேன். அதன் பிறகு அவருடைய போனை எடுக்கவில்லை.விசாரித்தபோது அந்த நபருக்கு திருமணமே நிச்சயமாகவில்லை என்று தெரிந்தது. அதன்பிறகு வேறு நம்பரில் இருந்து குரலை மாற்றி பேசி, :நான் ஒரு தயாரிப்பாளர், உங்களை வைத்து படம் எடுக்க விரும்புகிறேன். டைரக்டரை அனுப்பி கதை சொல்ல வைக்கிறேன் என்றார். அந்த ரசிகரின் போன் தொல்லையால் நிம்மதியில்லாமல் சில நாட்கள் கஷ்டப்பட்டேன்.

## உற்சாகத்தில் லோரன்ஸ்



காஞ்சனா 2' படத்துக்குப் பிறகு லாரன்ஸ் காட்டில் அடைமழைதான். ஓர் இளம் இயக்குநர் சொன்ன கதை லாரன்ஸுக்கும் பிடித்துப்போக, அவர் நயன்தாராதான் கதைக்குப் பொருத்தமான ஹீரோயின் எனச் சொல்லியிருக்கிறார். லாரன்ஸ் தரப்பிலிருந்து நயன்தாராவை அணுக, அவரோ மாஸ்டருடன் நடிக்க நான் எப்பவுமே ரெடி எனச் சொல்லிவிட்டாராம்.

## அட்லி இயக்கத்தில் மீண்டும் விஜய்




சிவாஜி புரொடக்ஷன்ஸ் கஷ்டத்தில் இருந்தபோது 'சந்திரமுகி' தந்து கைதூக்கிவிட்டார் ரஜினி. அவர்களே அஜித்தை வைத்து 'அசல்' எடுத்து கையைச் சுட்டுக்கொண்டதால் படத்தயாரிப்பில் இருந்து விலகி இருந்தனராம். தற்போது விஜய்யுடன் 'தெறி' படத்தில் நடித்தபோது விஜய்யிடம் எங்க பேனர்ல நடிக்கிறீங்களா என பிரபு கேட்க, அது என் பாக்கியம் எனச் சொல்லி விஜய்யும் ஓகே சொல்லியிருக்கிறாராம். அனேகமாக விஜய்யின் 61-வது படமாக இருக்குமாம். அட்லி இயக்குவார் என்கிறார்கள்.






## சிம்புவின் பதிலடி

சிம்பு பாடிய பீப் சாங்கிற்கு நாட்டில் வேறு தவறே நடக்காதது போல் அதை பலரும் திட்டினார்கள். இந்நிலையில் அதற்கு அவர் பல விளக்கங்களை கூறிவிட்டார். இந்நிலையில் அடுத்து சிம்பு, வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து ஒரு பாடலை பாடி வெளியிடவுள்ளார். இந்த பாடலுக்கு VOTE SONG என பெயர் வைத்துள்ளனர். விரைவில் இந்த பாடல் வரவிருக்கின்றது. சிம்பு பற்றி தவறாக பேசுபவர்கள், தற்போது நல்லதிற்காக ஒரு விஷயம் செய்கிறார், எத்தனை பேர் அவரை பாராட்டுகிறார்கள் என்று பார்ப்போம்

## சமந்தாவுக்கு ஓய்வு



சமீபத்தில் வெளிவந்த தெறி படம் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் இருக்கிறார் நடிகை சமந்தா. தமிழ் மட்டுமின்றி தெலுங்கிலும் அவருக்கு பெரிய ரசிகர் பட்டாளம் இருக்கிறது. அவர்கள் அனைவரையும் அதிர்ச்சியாக்கும் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார் அவர். "நான் கிட்டத்தட்ட 8 மாதங்களாக ஓய்வின்றி படங்களில் நடித்து வருகிறேன். அதனால் சிறிது காலத்திற்கு நடிப்பிற்கு முழுக்கு போட போகிறேன்" என கூறியுள்ளார்.

## சந்தோசத்தில் தமன்னா

தோழா படத்தின் வெற்றியால் யார் ஹப்பியோ இல்லையோ, தமன்னா ரொம்பவே ஹப்பி தமிழ், தெலுங்கில் மார்க்கெட்டை உயர்த்தியதோடு இந்தியிலும் நடிக்க தமன்னாவுக்கு அழைப்பு வந்திருக்கிறதாம். அமிதாப் பச்சன், அர்ஜுன் கபூர் நடிக்க இந்தியில் ரீமேக் ஆகும் தோழா படத்தின் தயாரிப்பாளர் கரண் ஜோகர் தமன்னாதான் இந்தி ரீமேக்கிலும் நாயகி என அழுத்தமாக சொல்லி விட்டாராம். இதனால் தமன்னா ஏக குஷியில் இருக்கிறாராம்

## மொழியரசி கீர்த்தி சுரேஷ்

தமிழ் சினிமாவில் நயன்தாராவை அடுத்து ஒரு இளம் நடிகை மற்ற நடிகைகளின் பொறாமையையும், நடிகர்களின் அபிமானத்தையும் பெற்றிருக்கிறார் என்றால் அது கீர்த்தி சுரேஷ்தான். நடித்து ஒரு படம் ரிலீஸ் ஆவதற்குள்ளேயே அரை டஜன் படங்களில் கமிட் ஆகி நடித்தவர். தற்போது விஜய் உள்ளிட்ட முன்னணி நடிகர்களின் படங்களிலும் நடிக்கிறார். அதற்கெல்லாம் காரணம், அவரின் சரளமான தமிழ்தானாம். மேலும் மலையாளம், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் என எல்லா மொழிகளுமே அம்மணிக்கு அத்துப்படியாம்.





## கஜாலின் பின்னால் 27 ஆயிரம் பேர்

இதுநாள்வரை பேஸ்புக்கில் மட்டும் கணக்கு வைத்திருந்த காஜல் அகர்வால் காலத்திற்கு ஏற்றவாறு தற்போது ட்விட்டர் பக்கம் வந்திருக்கிறார். சமூக வலைதளங்களால் நடிக, நடிகையர் தங்களது படங்கள் குறித்த விவரங்கள், செய்திகளை ரசிகர்களிடம் உடனுக்குடன் பகிர்ந்து கொள்கின்றனர். இந்நிலையில் தமிழ், தெலுங்கின் முன்னணி நடிகைகளில் ஒருவரான காஜல் அகர்வால் தற்போது ட்விட்டர் பக்கதில் இணைந்திருக்கிறார். மகேஷ்பாபுவின் 'பிரமொத்சவம்' படத்தில் நடித்து வரும் அப்படத்தின் போஸ்டரை தனது முதல் ட்வீட்டாக பதிவேற்றியிருக்கிறார். சேர்ந்த ஒரேநாளில் 27000 ரசிகர்கள் இவரைப் பின்தொடர ஆரம்பித்துள்ளனர.

## மீண்டும் பேயாக மாறும் திரிஷா?



நாயகி' படத்தைத் தொடர்ந்து மீண்டும் ஒரு பேய் படத்தில் திரிஷா நடிக்கப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. 13 வருடங்கள் தாண்டியும் தமிழ் சினிமாவில் வெற்றி நாயகியாக வலம் வரும் திரிஷா, தற்போது 'நாயகி' என்ற திகில் படத்தில் இரட்டை வேடங்களில் நடித்து வருகிறார். இதுதவிர தனுஷின் 'கொடி', 'காத்துவாக்குல ரெண்டு காதல்', 'போகி' ஆகிய படங்களும் திரிஷா கைவசம் உள்ளன.

இந்நிலையில் 'மதுர' இயக்குநர் மாதேஷ் இயக்கும் புதிய படத்தில் திரிஷா நடிக்கவிருப்பதாக கூறப்படுகிறது. Buy Tickets இதுவும் 'நாயகி' போல திகில் படம்தான் எனவும், இப்படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு லண்டனில் இருந்து துவங்கும் என்றும் படக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து இசையமைப்பாளர் விவேக்-மெர்வின் "முதன்முறையாக ஒரு திகில் படத்திற்கு இசையமைக்கவிருக்கிறோம். இது மிகவும் சவாலாக இருக்கும் என்று தெரிகிறது. இப்படத்தில் 4 பாடல்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம் என்று கூறியுள்ளனர். இது குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது

# தினச்செய்தியின் அனுசரணையில்


# வடக்கின் வல்லவன் 2016

தினச்செய்தியின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடாத்தும்வடமாகாண உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பதினொரு பேர் கொண்ட சுற்றுப் போட்டிகடந்த வாரம் ஆரம்பமாகியது. வடமாகாணத்தில் உள்ள 74 விளையாட்டுக் கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் விளையாடுகின்றன. வெற்றி பெறும் அணிகளுக்கு இலட்சக்கனக்கில் பணப்பரிசுகள் வழங்கப்பட உள்ளன. வடக்கின் வல்லவனுக்கான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 5 ஆம் திகதி நெற்கொழு கழுகுகள் விளையாட்டு மைதானத்தில் அரம்ப மாகியது. முதலாவது போட்டியில் நவிண்டில் கலைமதியை வி.க எதிர்த்து மயிலங்காடு ஞானகலா மோதியது. போட்டியின் முதற்பாதி ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் கபிலன் முதலாவது கோலை அடித்தார். ஆட்டத்தின் இரண் டாவது பாதி ஆட்டத்தில் கலைமதி வீரர்கள் கோல் அடிப்பதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களை ஞானகலா கோல் கீப்பர் சிறப்பாகத்தடுத்தமையினால் 1:0 என்றகோல் கணக்கில் ஞானகலா வெற்றி பெற்று

அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானகலா வீரர் தசாந்தன் தெரிவுசெய்யப்பட்டு அவரிற்கான பதக்கத்தினையும் பண பரிசினையும் கழுகுகள் வி.க மூத்த உறுப்பினரான மோகன்ராஜா வழங்கிகௌரவித்தார்.

6ஆம் திகதிகுருநகர் பாடுமீன் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து நாகர்கோவில் நாகதீபம் விளையாட்டுக் கழகம் விளையாடும் என அறிவிக்கப்பட்டிருந்தது. நாகதீபம் சமுகமளிக்காமையினால் பாடுமீன் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

7 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டி மெலிஞ்சிமுனை இருதயராஜா கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா மோதியது ஆட்ட நேர முடிவில் 2:0 என்ற கோல்கணக்கில் இருதயராஜா





வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக இருதயராஜா விளயாட்டுக்கழக வீரர் ஜெமிலியஸ் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான பணபரிசையும் பதக்கத்தையும் பருத்தித்துறை பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கு.பன்னீர்செல்வம் வழங்கி கௌரவித்தார். வவுனியா மருதநிலா, கிளிநொச்சி இரன்னை மாதா நகர் சென். மேரிஸ் கழகம் ஆகியவற்றுக்கிடையேயான போட்டியில் இரண்டு அணிகளும் கோல் அடிக்காமையினால் வழங்கப்பட்ட





பெனால்ரியில் 3: 2 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென். மேரிஸ் கழக வீரர் றோயல் பிரதீப் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணத்தையும் பதக்கத்தையும் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கு.பன்னீர்செல்வம் வழங்கி கௌரவித்தார்

மன்னார் சென். லூசியஸ், வரணி யுத் ஆகியவற்றுக்கிடையே 8 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் 4:0 என்ற கோல் கணக்கில் மன்னார் சென்.லூசியஸ் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக






சென்.லூசியஸ் வி.க வீரர் பிங்கோ தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பதக்கத்தையும் பணப் பரிசையும் கழக உறுப்பினர்.ஸ்ரீ. கோபிநாத் வழங்கி கௌரவித்தார். 09. ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்ட நேரமுடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கியம் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக சிவராஜ் தெரிவு செய்யப் பட்டு அவருக்கான பண பரிசையும் பதக்கத்தையும் நகர சபை செயலாளர் பிரசாத் வழங்கி கௌரவித்தார்.

10ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சி குமரன் மோதியது. ஆட்ட நேர முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். பண பரிசு மற்றும் பதக்கத்தினைமுன்னாள் கழுகுகள் விளையாட்டு கழக செயலாளர் பிரசாத் வழங்கி கௌரவித்தார்.

## 80 வயதிலும் ராஜநடை

இந்தத் தொழில்நுட்ப, நாகரிக உலகில் உடற்தகுதியின் அவசியம் குறித்து இளைஞர்கள் பலர் அறிந்திருந்தபோதும் உடற்பயிற்சிக்கும் விளையாட்டிற்கும் அவர்கள் போதிய நேரத்தைச் செலவிடுவது இல்லை என்பதே உண்மை. அதிகரித்து வரும் உடற் பருமன் பிரச்சினையே இதற்குச் சான்று. அத்தகையோருக்கெல்லாம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திகழ்கிறார் தமிழ்நாட்டின் சிவகாசியைச் சேர்ந்த டி.டி.ராஜேந்திரன், 80. கடந்த வாரம் சிங்கப்பூரில் தொடங்கிய ஐந்து நாள் ஆசிய மாஸ்டர்ஸ் திடல் தட வெற்றியாளர் போட்டிகளில் 80–84 வயதுப் பிரிவில் 5,000 மீ. தூரத்தை 41 நிமிடம் 14.12 வினாடிகளில் நடந்து கடந்து தங்கம் வென்றார் ராஜேந்திரன். சக போட்டியாளர்கள் எல்லாரும் காலில் காலணி அணிந்திருக்க, இவரோ வெறுங்காலுடன் நடை போட்டு வெற்றி நாயகனாக வலம் வந்தார்.

மூலிகை நிறுவனம் ஒன்றில் நிர்வாக இயக்குநரான இவர், தமது எட்டரை அங்குல கால்களுக்குப் பொருத்தமான காலணி கிடைப்பது சிரமமாக இருப்பதாகத் தெரிவித்தார். முந்தைய போட்டிகளில் காலணி அணிந்துதான் பங்கேற்று




வந்தேன். ஆனால், அவை சரியாகப் பொருந்தாததால் கால் நகங்கள் பிய்ந்து போயின. ஆனாலும் பிரச்சினையில்லை. ஏனெனில், காலணி இல்லாமல் வெறுங்காலில் நடக்கும்போதுதான் என்னால் வேகமாக நடக்க முடிகிறது, என்றார் அவர். ஆறு பேரக்குழந்தைகளின் தாத்தாவான இவர், தமது பள்ளிப் பருவத்தில் போல்வால்ட் எனப்படும் தடி ஊன்றித் தாண்டும் விளையாட்டில் முயன்று பார்த்தார். அதற்குப் பிந்தைய அவரது இளமைப் பருவம் விளையாட்டுடன் தொடர்பில்லாமலேயே கழிந்தது.

## உலக சாதனை தகர்ப்பு

உடற்குறையுள்ளோருக்கான ஐரோப்பிய வெற்றியாளர் போட்டிகளில் சிங்கப்பூர் நீச்சல் வீராங்கனை யிப் பின் சியூ 100 மீ. பின்நீச்சல் (எஸ்2) பிரிவில் புதிய உலக சாதனை படைத்தார். போர்த்துகலின் ஃபுன்ச்சல் நகரில் நடைபெறுகிறது. அதில், 2008 பெய்ஜிங் பாராலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்றவரான யிப், 100 மீ. தூரத்தை 2 நிமிடம் 9.79 வினாடிகளில் மல்லாந்து நீந்திக் கடந்து தங்கத்தைத் தனதாக்கினார். முந்தைய சாதனையைவிட கிட்டத்தட்ட ஏழு வினாடிகள் குறைவாகப் பதிவு செய்திருந்தார் யிப். 2014ல் உக்ரேனின் கானா லெலிசவெட்ஸ்கா 2 நிமிடம் 16:31 வினாடிகளை எடுத்துக்கொண்டதே முந்தைய சாதனை. போட்டியின்போது முதல் 50 மீ. தூரத்தைக் கடக்க இவர் எடுத்துக் கொண்ட நேரமும் புதிய உலக சாதனையானது. அந்த தூரத்தை இவர் 1 நிமிடம் 1.39 வினாடிகளில் கடந்தார்.

இன்னொரு போட்டியில் சிங்கப்பூரின் யிப் பின் சியூ இரண்டாவது முறையாக சாதனை படைத்தார். உடற்குறையுள்ள மகளிருக்கான 50 மீற்றர் மல்லாந்து



நீச்சல் போட்டியில்யிப் தமது சாதனை நேரத்தை முறியடித்தது மட்டுமல்லாது தங்கப்பதக்கத்தையும் வென்றார். இந்தப் போட்டியில் அவர் தங்கம் வென்றிருப்பது இது இரண்டாவது முறை

# I AM HERO; MY VILLAIN KALAIGNAR VILLIE IS JAYALALITHAA GOOD AH?

## விஜயகாந்த் கலக்கல்!

தேர்தல் தொடர்பாக என்.டி.டி.விக்கு விஜயகாந்த் பேட்டி ஒன்றை அளித்துள்ளார்.

என்.டி.டி.வியின் பிரனாய் ராய் தலைமையிலான 3 பேர் கொண்டகுழு விஜயகாந்திடம் ஆங்கிலத்தில் கேள்விகளை கேட்கிறது.

எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் அதிரடியாக ஆங்கிலத்திலும் தமிழிலும் அசரவைக்கும் பதில்களை கூறியுள்ளார் விஜயகாந்த்.

இந்த தேர்தலில் உங்களது பங்கு என்ற கேள்விக்கு, *I am hero.. My Villain is Kalingar- My Villei is Jayalalithaa..* என்று கூறிவிட்டு யா? யா? என எதிர் கேள்வி கேட்க என்டிடிவி டீம் கலகலவென சிரித்து கொண்டே ஆமோதிக்கிறது.



இடமிருந்து வலம்: பிரனாய் ராய் (பத்திரிகையாளர்), தேமுதிக தலைவர் விஜயகாந்த், ஷேகர் குப்தா (பத்திரிகையாளர்). சமூக வலைதளங்களில் உலவும் படம்

இதனைத் தொடர்ந்து தாம் 94 வயது கருணாநிதி, 68 வயது ஜெயலலிதாவுடன் மோதுவதாக கூறிய விஜயகாந்த், இருவரது வயதும் சரியாக எனக்குத் தெரியாது என்றார். பின்னர் *I don't care about the age, heart is young* என பதிலளித்தார் விஜயகாந்த்.

அதிமுக, திமுக கட்சிகளுடன் கூட்டணி வைக்காதது ஏன் என்ற கேள்விக்கு பால் விலை, பஸ் கட்டணத்தை கூட்டிய 3 மாதங்களிலே வெளியே வந்ததை சுட்டிக்காட்டிய விஜயகாந்த், *First time Am one Seat, second time 41 seats winning 29 seats* என ஆங்கிலத்தில் கூறினார்.

சங்கரன் கோவில், பென்னாகரம் இடைத் தேர்தல்களை சுட்டிக் காட்டிய அவர், பால் விலை உயர்வை இப்போது குறைப்போம் என்கிறார்கள்... காரணம் பயம் என்றார்.

ஜெயலலிதா, கருணாநிதியை நேரில் சந்திக்க நேர்ந்தால் எப்படி எதிர்கொள்வீர்கள் என்ற கேள்விக்கு, என்னைய பார்த்தா அந்த அம்மா மூஞ்சியை இப்படி திருப்பிக்கும். கருணாநிதியும் அப்படிதான் சார்... எம்.ஜி.ஆர். கிட்ட பேசுனா போச்சு.. கருணாநிதியை பார்த்தா போச்சு.. 2 பேரையும் நான் பார்த்தா பேசமாட்டேன்.

நானும் அதேதான் திரும்பிக்குவேன்.. ஆனால் கருணாநிதி பேசுவார்... அவர் பேசினான நின்னு என்ன சார்னு மரியாதை செய்வோம். அவர் எதையும் தமக்கு சாதகமாக்கிக் கொள்பவர்.

*Advantage in Kalaingar* என பதிலளித்தார்.

எப்படி அடுத்து ஆட்சி அமைப்போம் என சொல்றீங்க என்ற கேள்விக்கு, அரசாங்கத்தை உருவாக்குவதெல்லாம் மக்கள் ஹார்ட்... அனுபவம் அனுபவம்னு சொல்றதெல்லாம் ஹம்பக்.. *Jayalalithaa Manifesto is humbug... Going on My manifesto First..* அதைப் பார்த்து அவங்களுக்கு பயம் வந்துருச்சு...

திமுக, அதிமுக தேர்தல் அறிக்கையில் அள்ளி விடுறாங்க என்றார்.

எத்தனை சீட்டு ஜெயிப்போம்னு சொல்றதுக்கு நான் ஒன்னும் அஸ்ட்ராலஜர் இல்லை.. 120 சீட்டு இருந்தாலும *Win Win* தானே... என்றார்.

நீங்கள் அதிகமாக மது அருந்துவதாக சொல்கிறார்களே என்ற கேள்விக்கு, நான் தான் வந்து செக் பண்ணுங்கன்னு சொல்லிட்டேன்...


இப்ப யாரும் இதை சொல்றது இல்லை.. *It is old... My Wife is challenge....* .... போன வருஷம் நான் பொங்கலுக்கே விழுப்புரத்தில் சொன்னேன்... அப்ப இருந்து இப்ப வரைக்கும் வாங்க செக் பண்ணுவோம்னு 3 தடவை சொல்லிட்டேன்... என்றார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்க என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த விஜயகாந்த், ரேஷன் பொருட்களை வீடு தேடி கொடுப்போம்னு சொல்றோம்.. அதுல வேலை வாய்ப்பை உருவாக்குவோம். 100 நாள் வேலை திட்டத்துல ரூபா 300 ரூபா 500 வாங்கித் தருவேன் என்றார்.

மற்றொரு கேள்விக்கு ஜெயலலிதா அதிகமாக லஞ்சம் வாங்கி இருக்காங்க... அதனால ஒரு தொகுதிக்கு ரூபா 10 கோடி செலவு செய்றாங்க.. இதனால எல்லாரும் அவங்க காலில் விழுறாங்க.

தமிழ்நாட்டை தலைநிமிர செய்யுறதுக்கு முன்னாடி ஜெயலலிதா அவங்க ஆளுங்களை தலைநிமிர செய்யுங்கன்னு சொல்றேன்... அந்த அம்மாவுக்கு காலில் விழுவது பிடிக்குது..

அது என்ன *Reason*– ன்னு தெரியாது இதுவரைக்கும் அந்த அம்மா எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றார்.



## கண்ணே கமராதான்!

லண்டனைச் சேர்ந்த ஸ்டீபன் வில்ஷிரே வித்தியாசமான மனிதர். இவருடைய கண்கள் கமரா போன்றதாம். எந்த ஒரு காட்சியையும் ஒரு முறை பார்த்தால் அதை அப்படியே வரைந்து அசத்தி விடுவாராம்.

ஐந்து வயதாகும்போது இவருக்குள் இருக்கும் ஓவியத் திறமையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் ஸ்டீபனின் பெற்றோர்கள். பள்ளியில் படிக்கும்போது முதன் முறையாக தூரிகையைக் கையில் எடுத்திருக்கிறார். ஆரம்பத்தில் விலங்குகள், கார்களை வரைந்து பழகியவர், ஏழு வயதாகும்போது புதிய முயற்சியாக லண்டனில் இருக்கும் முக்கியமான சில இடங்களை வரையத் திட்டமிட்டு ஒரே ஒரு முறை அந்த இடங்களைப் பார்த்துவிட்டு அப்படியே வரைந்திருக்கிறார். இதனால் சின்ன வயதிலேயே லண்டன் முழுவதும் பிரபலமாகிவிட்டார். இவருடைய அபூர்வமான திறமையைப் பார்த்து வியந்த பள்ளி ஆசிரியர் இவருக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்.

குறிப்பிட்ட சில இடங்கள், கட்டடங்களை மட்டும் அதுவரை வரைந்து வந்தவர், திடீரென விஸ்வரூபம் எடுத்து பூமியின் நில அமைப்பையே வானில் இருந்து வரையத் தொடங்கிவிட்டார். இதற்காக ஹெலிகாப்டரில் பல கிலோ மீட்டர்கள் பறந்து வரைய வேண்டிய இடங்களைப் பார்த்தபடியே செல்வாராம். தரை இறங்கியதும் அதை அப்படியே கேன்வாஸில் கொண்டு வந்து ஆச்சரியப்படுத்தி விடுவாராம்.

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அலன் தம்பதியினரைக்...

மேலும் இக் கடத்தல் மூலம் தமிழ்ப் போரளிகள் மீது இந்தியா வைத்திருந்த ஆதரவை இழக்க நேரிடும் என்றும் எம்.ஜி. இராமச்சந்திரன் எச்சரிக்கை விடுத்தார்.

இந்திரா காந்தியின் அறிக்கை ஒவ்வொரு முப்பது நிமிடத்திற்கும் ஒரு தடவை அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வந்தது.

இவ்வாறு நெருக்கடிகள் கொடுக்கப் பட்டதையடுத்து மறுநாள் அலன் தம்பதிகளை யாழ்ப்பாண ஆயர் இல்லத்தில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எப். விடுதலை செய்தது.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட தம்பதியினர் தங்களைக் கடத்தி வைத்திருந்தவர்கள் பற்றி குறிப்பிடுகையில் கடத்தி வைத்திருந்தவர்கள் "தாங்கள் பயங்கரவாதிகள் அல்ல விடுதலைப் போராளிகள் என்றும், அவர்கள் பயங்கரவாதிகளானால் எங்களைக் கொன்றிருப்பார்கள்" என்றும் கூறினார்கள்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 2

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................

சிறுகதையின் இலக்கம் : ..............................

எழுதியவர் பெயர் : ..............................

சிபார்சு செய்பவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

தொலைபேசி இலக்கம் : ..............................

.............................. ஆகிய நான்

இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................

ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

## போட்டிச் சிறுகதை 1



சர்மிளா அற்புதராசா
இல. 63 கல்விளான்,
துனுக்காய்.

# அக்கினியில் வெந்த பூ

இரவு வேளையில் வானில் ஒளி வீசிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் சில கூட்டமாகவும், தனியாகவும் பிரிந்து அங்கங்கே கண்சிமிட்டிக் கொண்டிருந்தன. வானத்தில் கைகளால் போடப்படாத கோலங்கள் அவை. அது ஒரு நிசப்தமான சூழ்நிலை. அக்கம் பக்கங்களில் நாய்கள் குரைக்கும் சத்தமும், கேட்டுக்கொண்டே இருக்கின்றது. கிடுகுகளாலும், தகரங்களினாலும் அடைக்கப்பட்ட அந்த ஓட்டைக் குடிசைக்குள் இருந்து கொண்டு அதன் வழியாக தொலை தூரத்தில் ஒரு விண்மீன் மட்டும் தனியாக மின் னிக் கொண்டிருப்பதை கவிக்குயில் கண்ணுற்றாள். அந்த விண்மீனையே வெறித் துப் பார்த்துக் கொண்டிருந்தவள் தனது கடந்தகால வாழ்க்கையை மீட்டிப் பார்க்கலானாள்.

ஆம்! அந்த மலைச்சாரலில் எழிலுறும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள் தான் கவிக்குயில், பெற்றோருக்கு ஒரேயொரு செல்லப் பிள்ளை. பார்த்தவரைக் கவர்ந்து விடும் அழகும், பண்பும் கொண்டவளாய் இருந்தாள். எனினும் ஏழைக்குடும்பம் ஆதலால் கைநிறைய பணம் ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் வைத்திருந்த பாசத்திற்கும் பரிவிற்கும் அணைகட்டவே முடியாது. கவிகுயில் பிறந்து ஐந்து வயதாகும் போதே தாய் பார்வதி இறைவன் பதம் சேர்ந்தார். இதனால் கவிக்குயிலின் ஒரே அணைப்பு தந்தைதான். கோவிந்தன், தோட்டவேலை செய்பவர். அவரது உழைப்பு வீட்டுச் செலவிற்கும் உடுபுடைவைக்குமே போதுமாதாக இருந்தது. இவ்வாறு வாழ்க்கைச் சக்கரம் ஓடிக்கொண்டிருந்தது.

கவிக்குயிலும் வளர்ந்து க.பொ.த. சாதாரணதர பரீட்சையை எழுத நெருங்கியிருந்த வேளை ஒருநாள் பாடசாலை முடிந்து வீடு செல்லும் போது கடத்திச் சென்று காமுகரால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானாள். இங்கு கோவிந்தனோ மகளைக் காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்தார். அவ்வாறே ஒரு மாதத்தின் பின் மீட்கப்பட்டாள். கவி தான் கடத்தப்பட்டு அனுபவித்த துன்பத்தையும் கர்ப்பமாக இருக்கிறதையும் கூறினாள். எந்த பாவமும் அறியாமல் உருவான உயிரை அழிக்க இருவருக்கும் மனம் வரவில்லை. இதனால் கவிக்குயில் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியேற்பட்டது. சமூகமும் அவளை அவதூறாகப் பேசியது. தப்பு பண்ணியவர்களை எதுவும் சொல்லாது எந்த தப்பும் பண்ணாத அவளை சமுதாயம் ஒது க்கியது. தன் மகளின் நிலையையும், சமூகத்தின் புரிந்துணர்விலலாத நடப்பையும் நினைக்கும் போது கோவிந்தன் மனம் குமுறியழுதார். வயது கடந்து கொண்டிருக்கையில் திடீரென வருத்தம், வலி தாங்க முடியாமல் இறந்தார்.

தனித்து நிற்கும் கவிக்குயிலுக்கு தலைகால் புரியவில்லை. தனக்கு ஏற்பட்ட அவல நிலையால் ஆண்களை வெறுத்தாள். இப்போது தந்தை இறந்து தனி மரமாக நின்றவளுக்கு இக் கொடூர சமுதாயத்தில் வாழ்வதென்பது பயம்தான். நல்லவர்கள் ஒருபுறம் இருந்தாலும், பெண் பித்துக் கொண்டவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். இதனால் இந்த சிறுவயதிலேயே தனக்கொரு வாழ்க்கைத் துணையை தேடிக் கொண்டாள். அவன் பெயர் தான் ரவி. இல்லற வாழ்வு நல்லறமாக நடந்தது. ரவி நடந்த பிரச்சினையையும், கவியின் வயிற்றில் வளரும் குழந்தையையும் அறிந்தே திருமணம் செய்தான்.

தாய், தந்தை இறந்தாலும் கடவுள் எனக்கு ஒரு நல்ல கணவனைக் கொடுத்துள்ளான் என்றே எண்ணிக் கொண்டிருப்பாள். சில மாதங்களின் பின் வயிற்றில் சுமந்த பிள்ளையை கவி பெற்றெடுத்தாள். கடவுளின் சோதனைக்கு அளவே இல்லை என்று தான் கூற வேண்டும். ஏனெனில் ஒரு கால் ஊனமான பெண் குழந்தை பிறந்தது. ஒருவருடம் கடந்தது. ரவி ஒழுங்காக வீட்டிற்கு வராமல் நண்பர்களுடன் ஊர் சுற்றினான். தினமும் குடித்து விட்டு வந்து அடிப்பான். குடி குடியைக் கெடுக்கும் என்பது போல் ரவிக்கும் கவிக்குயிலுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

ஒரு நாள் ரவியிடம் நீங்க ஏன் இப்படி நடக்கிறீங்க, இந்த பழக்கத்தையெல்லாம் விடுங்க எனக் கெஞ்சினாள்.

ஆனால் ரவியோ எனக்கு எல்லாம் தெரியும் நீ உன்ரவேலையைப் பார் என்று மறு பேச்சு பேச விடாது தடுத்தான்.

கண்ணீரும், கம்பலையுமாக வாழ்வைக் கழித்தாள். தற்கொலை செய்ய முயற்சித்தும் அவளால் முடியவில்லை. குழந்தைக்காக தேற்றிக் கொண்டாள். தானே வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள். தேயிலைத் தோட்டத்திற்குச் சென்று தேயிலை கொய்தாள். குழந்தை பூரணி வளர்ந்து வருகையில் அவளை முன் பள்ளியில் சேர்த்து விட்டு வேலைக்குச் சென்று வருவாள்.

கவி உழைத்து வரும் பணத்தையும் பறித்துச் செல்வான். அவளால் என்ன செய்ய முடியும். வீட்டில் நல்ல மரக்கறிகள் வாங்கி சமைக்க முடியாது. விலைவாசி ஏற்றம் மற்றொரு தொல்லை. ஆனால் ரவியோ "தனக்கு பிடிக்காததை ஏன் சமைத்தனியடி?" என்று கேட்பான். காசு இல்லை என்று கூறினால் பக்கத்து வீட்டில் கடன் வாங்கி சமைக்கச் சொல்லி மிரட்டுவான். அவனது நடத்தையைப் பார்த்து புளுவாய்த் துடித்தாள். அம்மா, அப்பாவுடன் இருந்த சந்தோசம் காற்றோடு பறந்து விட்டதாக எண்ணி மனம் நொந்து அழுவாள். ஆரம்பத்தில் அன்போடு நடந்த ரவியும் இன்று மிருகம் போல் கர்ச்சித்தான்.

நாட்களும் நகர்கையில் 'தலையில் இடி விழுந்தாற் போல்' செய்தி ஒன்று கவிக்குயிலண்டை வந்து சேர்ந்தது. ரவி ஏற்கனவே இரண்டு திருமணம் செய்துள்ளதும், பல பெண்களை ஏமாற்றியுள்ளதும் தெரிய வந்தது. "வலையில் சிக்கிய மான் போல" தான் ரவியிடம் அகப்பட்டதை உணர்ந்தாள். அவனை நினைக்கவே இரத்தம் கொதித்தது. ரவிக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என நினைத்தாள். வேலை முடிந்து வீடு வந்த கவி ரவிக்காக காத்திருந்தாள். இரவுமாகியது. ரவி நன்றாக குடித்து விட்டு வந்தான். "கவி சாப்பாட்டைப் போடடி கெதியா" என கத்தினான்.

உடனே அவள் அவனருகில் மின்னலென சென்று "நான் இனி ஒன்றும் செய்யமாட்டேன் சட்டப்படி என்ன செய்யணுமோ அதை செய்திட்டன், ஒருநாள் அவகாசம் தாறன் நாளைக்கு என்ர வீட்டை விட்டு செல்ல வேண்டும்" என பெண் சிங்கமாய் கர்ச்சித்தாள். அவனால் எதிர் பார்க்கவே முடியாமல் தடுமாறினான். மறுநாளே வீட்டை விட்டுச் சென்றான்.

ரவியின் தொல்லை இல்லாமல் நிம்மதியாக வாழலாம் என நினைத்தாலும் அவளால் நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை. அங்கு வரும் ஆண்கள் அவளை கிண்டலடிப்பதோடு தவறாக நடக்கவும் முயற்சித்தனர். இதனை அவள் சகிக்க கூட முடியாதிருந்தும் வறுமையின் கொடுமையால் உழைத்தாள். சமூகத்தில் கூடியிருந்து வெட்டிப் பேச்சு பேசும் பெண்கள் ஒருநாள் கவி கோயிலுக்குச் செல்லும் போது அங்க பாரடி இரண்டாவது கல்யாணம் செய்து புருசனையும் துரத்தி விட்டு இப்ப மகாராணி போல நடந்து போற வடிவ, என நக்கலடித்தனர்.

வழமையாக இவ்வாறு கதைக்கும் போது "சிறகிழந்த பறவையைப் போல்" தன்பாட்டில் செல்வாள். இன்று அவர்களருகில் தைரியமாகச் சென்றாள். அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கவி அமைதியாகப் பேசலானாள், "உங்களுக்கு வேற வேலையே இல்லையா?" ஒரு பெண் இப்படி வாழுறாளே என்று மற்ற பெண்கள் ஏக்கப்பட வேண்டும், அதை விட்டுட்டு வெட்டிப் பேச்சு பேசுறீங்க. என் நிலைமை உங்களுக்கோ அல்லது உங்கள் பிள்ளைகளுக்கோ வந்திருந்தால் இப்படி பேசுவீங்களா? மற்றவர்களைப் பற்றியும் கொஞ்சம் சிந்தியுங்க. உங்களைப் பெற்ற தாய் ஒரு பெண் நானும் ஒரு பெண் தானே தயவு செய்து இனி ஏளனம் செய்வதை நிறுத்துங்கள்" என கண்களில் நீர் ததும்ப கூறினாள். அதோடு அங்கு நில்லாமல் விலகிச் சென்றாள்.

இவ்வாறு வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கும் போது அவளின் மகள் பிரியா பரீட்சை எழுதி விட்டு பெறுபேற்றுக்காக காத்திருந்தாள். தன் மகளை எப்படியும் படிப்பித்து பெரியாளாக்கணும் என்று கனவு கண்டாள். ஆம் அவ்வாறே பிரியாவின் பெறுபேறும் வந்தது. பாட சாலையிலேயே முதல் இடம் அவள் தான். சந்தோச மழையில் நனைந்து துள்ளிக் குதித்தாள். ஓடோடிச் சென்று தாய் கவியிடம் கூறினாள். தாய் விழியில் ஆனந்த கண்ணீர் ஊற்றெடுத்தது. உயர் தரம் கற்க தகுதி பெற்றிருந்தும் வறுமை காரணமாகவும் படிப்புச் செலவை ஈடுகொடுக்கவும் என வன்னியில் குடியேறினார்கள். இனிதே வாழ்க்கையை ஆரம்பித்தனர். அவ்வாறே இரண்டு வருடங்கள் உருண்டோடின. போர் மூண்டது இதனால் பலர் உயிரிழப்புக்களைச் சந்தித்தனர். பதுங்கு குழிக்குள்ளே வாழ்ந்தனர்.

ஒரு நாள் பிரியா "அம்மா எனக்கு தண்ணீர் தாகமாக இருக்கு. தண்ணீர் குடிச்சிட்டு வாரன்" எனக் கெஞ்சினாள். "பிரியாம்மா கொஞ்சம் பொறுங்க. ஷெல் சத்தம் ஓயட்டும் போலாம்" என பதுங்கு குழிக்குள் இருந்து வெளியே செல்ல விடாது கவி தடுத்தாள். இருந்தும் "எனக்குத் தெரியாது நான் போறன்" என்று கூறிக் கொண்டு வெளியே சென்றவளை எங்கிருந்தோ வந்த ஷெல் பிரியா உயிரைக் குடித்தது. அம்மா என்ற




கத்தியவாறே தரையில் சாய்ந்தாள். அடக் கடவுளே இது பிரியாவின் குரலாச்சே! பதறியடித்து வெளியே சென்றாள் கவி. "ஐயோ! பிரியா என்னை தனியாக தவிக்க விட்டுப் போட்டியே" எனக் கதறி அழுதாள்.

ஆண்டாண்டு அழுது புரண்டாலும் மாண்டார் வந்து விடப் போவதில்லை. தெரிந்தாலும் நிதம் பிரியாவின் பிரிவால் கண்ணீர் சொரிந்தாள். மக்களோடு மக்களாக கால் போன போக்கில் சென்றாள். ஒருவாறு போரும் முடிந்து மக்களை அவரவர் ஊருக்கு அனுப்பவே பிரியாவின் நினைவோடு தனது சொந்த இடத்திற்கு கவிக்குயில் வந்து சேர்ந்தாள். வயிற்றுப் பிளைப்பிற்காக ஒரு சின்னக் கடை ஆரம்பித்தாள். புத்தகம் சுமக்கும் வயதினிலே கருவைச் சுமந்து பெற்றெடுத்து வளர்த்த பிள்ளையை இழந்ததையும் கணவனைப் பிரிந்ததையும் எண்ணி வாழ்க்கையில் எதிர் கொண்ட சவாலையும் எண்ணிப் பார்க்கையில் பக்கத்து வீட்டு வானொலியில் "ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறது" என்ற பாடல் ஒலித்தது. கவியின் காதில் விழுந்ததும் சுய நினைவுக்கு வந்தவளாய் நேரத்தைப் பார்த்தாள் நேரம் எட்டைக் கடந்திருந்தது. பெரு மூச்சுடன் படுக்கைக்குச் சென்றவள் நிம்மதியின்றி உறங்கினாள்.


இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.





ஜெ. யோகராஜ்

# MS OFFICE இன் பயன்களும் பாவனையும்

ஒரு MS WORD ஆவணத்தை உருவாக்கும் பொழுது அதிலுள்ள குறிப்புக்களை எண்களால் பட்டியற்படுத்துவது மற்றும் வேறு குற்றுப்புள்ளிகளால் பட்டியற்படுத்துவது பற்றி பார்க்கலாம். கீழே தரப்பட்டுள்ள உதாரணத்தை கவனியுங்கள்.





மேலுள்ள படத்தில் இலக்கங்களைக் காணலாம். இவற்றை செயற்படுத்த MS WORD இன் மேல் மூலையிலுள்ள தெரிவுகளில் ஒன்றை நாம் பயன்படுத்தவேண்டும். இலக்கங்களுக்கு பதிலாக குற்றுப் புள்ளிகளையும் பயன்படுத்தலாம்.





இது இலக்கங்களைத் தெரிவு செய்வதற்கான வழி
இது குற்றுப்புள்ளிகளை தெரிவு செய்வதற்கான

இப்போது ஒரு ஆவணத்தின் வாக்கியங்களுக்கிடையிலான வரிசைக்கிரம இடைவெளியை கூட்டுவது எவ்வாறு என்று பார்ப்போம்.





இப்படியான ஒரு வசனக் கட்டமைப்பின் வரிசைகளுக்கிடையிலான இடைவெளியை அதிகரிக்க கீழ் தரும் வழிமுறையை பின்பற்றலாம்.





இந்த வசதியைப் பெற்றுக்கொள்ள MS WORD இன் மேல் மூலையிலுள்ள இந்தத் தெரிவை மேற்கொள்ளலாம். இந்த இடைவெளியின் அளவை 1.0, 1.5, 2.0 என்று நீண்டு செல்லும் பரிமாணங்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளலாம்.

இந்த வசதியைப் பெற்றுக்கொள்ள MS WORD இன் மேல் மூலையிலுள்ள இந்தத் தெரிவை மேற்கொள்ளலாம். இந்த இடைவெளியின் அளவை 1.0, 1.5, 2.0 என்று நீண்டு செல்லும் பரிமாணங்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளலாம்.





ஆவணத்தின் மேல் வலது மூலையில் உள்ள இந்தத் தெரிவை மேற்கொள்வதன் மூலம் எழுத்தின் நிறத்தை மாற்றிக் கொள்ளலாம். இங்கு மூன்று நிறங்களில் வசனங்கள் எழுதப்பட்டுள்ளன.

இப்போது எழுத்தின் பின்னணி நிறத்தை மாற்றுவது குறித்து கவனம் செலுத்துவோம். கீழே தரப்பட்டுள்ள உதாரணத்தை அவதானியுங்கள்.




ஆவணத்தின் மேல் வலது மூலையிலுள்ள இந்தத் தெரிவை மேற்கொள்வதன் மூலம் எழுத்து பின்னணி நிறத்தை மாற்றலாம். இங்கு மஞ்சள் நிறமாக மாற்றப்பட்டுள்ளது.


அடுத்து, ஒரு ஆவணத்தில் உள்ள பக்கங்களுக்கு இலக்கம் இடுகின்ற செயல்பாட்டை பார்ப்போம்.




இது ஆவணத்தின் முதல் பக்கமாகும். இந்த பக்கத்திற்கான இலக்கத்தை பல வழிகளில் குறிப்பிடலாம். அவையாவன:

1. மேல் நடுப்பகுதி 4. கீழ் நடுப்பகுதி
2. மேல் இடது மூலை 5. கீழ் இடதுமூலை
3. மேல் வலது மூலை 6. கீழ் வலதுமூலை

(தொடரும்)




## தெரியாத நம்பரில் இருந்து வரும் அழைப்பை போட்டோவுடன் தெரிந்துகொள்வது எப்படி?



இன்றைய நாட்களில் தெரியாத இலக்கத்தில் இருந்து எமது ஸ்மார்ட் போனிற்கு வரும் அழைப்புக்கள் பெரும் தொல்லையாகவே பார்க்கப்படுகிறது. எமது தளத்திலும் தெரியாத இலக்கங்களில் இருந்து உங்களது போனிற்கு வரும் அழைப்புக்களை அந்த நொடியே தெரிந்து கொள்வது எப்படி என்ற பதிவை கீழே வழங்கப்பட்டிருக்கும் லின்க் கில் சென்று வாசித்து தெரிந்து கொள்ள முடியும். தெரியாத இலக்கத்தில் இருந்து வரும் அழைப்பு யாருடையது என்று அந்த நொடியே தெரிந்து கொள்வது எப்படி? இதில் இருக் கும் சிறப்பம்சம் என்னவென்றால், உங்களுக்கு வரும் அழைப்புக்கள் யாருடையது என்பதை போட்டோவுடன் தெரிந்து கொள்ள கூடியதாய் இருக்கும். பேஸ்புக் நிறுவனத்துடன் இணைந்து தொழிற்படும் அன்ராய்ட் செயலி ஒன் றின் மூலம் இந்த அனைத்து விடயங் களும் சாத்தியமாகின்றன. இந்த செயலி எவ்வாறு தெரி யாத இலக்கங்கள் யாரு டையது என்பதை கண்டு பிடிக்கிறது?

இந்த செயலி பேஸ்புக் நிறுவனத்துடன் இணைந்து தொழிற்படுவதால் உங்கள் போனுக்கு வரும் அழைப்புக்குரிய இலக்கம் பேஸ்புக் அல்லது மெசஞ்சர் கணக்கு ஒன்றில் இணைக்கப்பட்டு இருந் தால், குறித்த பேஸ் புக் கணக்கில் ப்ரோபைல் போட்டோவுடன் குறித்த இலக்கம் யாருடையது என்பதை பெயர் விபரங்க ளுடன் உங்களுக்கு காட்டுகிறது. குறிப்பு: இந்த அன்ராயிடு சிறப்பு செயலி, உங்களது போனுக்கு வரும் அனைத்து தெரியாத இலக்கங்களையும் சரியாக காட்டாவிட்டாலும், 80% இற்கும் அதிகமான இலக்கங்களை மிகச்சரியாக இனம் கண்டு கொள்கிறது. இன்றைய காலகட்டத்தில் தெரியாத இலக்கத்தில் இருந்து எமக்கு வரும் தொல்லை அழைப்புக்களில் இருந்து விடுபட இந்த செயலி எமது ஸ்மார்ட் போனில் கட்டாயம் இருக்க வேண்டிய ஒன்று தான்..

முதலாவதாக கீழே வழங்கப்பட்டிருக்கும் அன்ராயிடு செயலியை உங்களது போனிற்கு பெற்றுக் கொள்ளுங்கள். அடுத்து இந்த செயலியை உங்களது போனில் ஆரம்பித்து, இதிலே போன் நம்பர் மற்றும் பெயர் விபரங்களை வழங்கி கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலம் இந்த சேவையுடன் உங்களை இணைத்து கொள்ளுங்கள். அவ்வளவு தான்.. இப்போது உங்களது *Call Log* ஸ்கேன் செய்யப்பட்டு அனைத்து தெரியாத இலக்கமும் யாருடையது என்பதை அவர்களது போட்டோவுடன் பட்டியலிட்டு காட்டுகிறது இந்த அருமையான செயலி.

இவை தவிர, உங்களுக்கு தேவையில்லாத அழைப்புக்களை புளொக் செய்வது என்று இன்னும் பல பய னுள்ள வசதிகளை தருகிறது இந்த செயலி. ஆனால் கவலையான விடயம் என்னவென்றால், இந்த செயலி இலங்கை இந்தியா போன்ற ஆசிய நாடுகளுக்கான கூகுள் ப்லே ஸ்டோரிலே கிடைக்காது.



## மனித தோலினால் ஆன ஸ்மாட் தொழில்நுட்பம்

விசேட இலத்திரனியல் சாதனம் ஒன்றினூடாக மனித தோலினை பயனர் இடைமுகமாக (User Interface) பயன் படுத்தி ஸ்மார்ட் கைக்கடிகாரத்தினை கட்டுப்படுத்துதல் ஆகும்.

SkinTrack எனும் இச் சாதனத்தை பென்சில்வேனியாவிலுள்ள Carnegie Mellon பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Future Interfaces Group எனும் ஆராய்ச்சியாளர் குழு உருவாக்கியுள்ளது.

இச் சாதனமானது இரு பரிமாண அளவிடைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது.

External Link 1 :
https://googledrive.com/host/0B3PeL7POEkN0SlRwaV9MYThHb0U
External Link 2 :
https://play.google.com/store/apps/details?id=com.facebook.phone&hl=en

**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com

ஜெ.யோகராஜ் (**email Address : yogaraj35@gmail.com**)

# வீழ்ச்சி காணும் பிரித்தானிய பல்கலைக்கழகங்கள்

பாலர் பாடசாலையில் அரிச்சுவடி கற்கத் தொடங்கும் எமக்கு பல்கலைக் கழகங்களுள் நுழைந்ததும்பரந்து விரிந்த அறிவு கிடைக்க வாய்ப்புக் கிடைக்கின்றது. முன்பு படித்தவற்றை ஆழமாக . விரிவாக நாம் கற்க ஆரம்பித்ததும் பொறியியலாளராகவோ அல்லது ஒரு மருத்துவராகவோஅல்லது வேறு எந்தத் துறையிலோ புகுந்து தொழில் தேடிக் கொள்ளவும் இங்கே நுழைவாயில்கள் திறப்பதுண்டு

இந்தப் பல்கலைக் கழகப் படிப்பு எல்லோருக்கும் சாத்தியப்படுவதில்லை.

அப்படிச் சாத்தியப்பட்டாலும் பல வருடங்கள் நீளும் இந்தப் பல்கலைக் கழகப் படிப்பை முழுமையாக எல்லோரும் படித்து முடித்து விடுவதுமில்லை.

**-ராஜேஸ்மணாளன்-**

ஆனால் இங்கே ஒன்று மட்டும் நிச்சயம்.. கடையில் பொருட்களை வாங்கும் போது இது எந்தக் கம்பனியின் உற்பத்தி என்று தரம்பார்த்து வாங்குவதுபோல எனது பிள்ளையின் மேற்படிப்பிற்கு எந்தப் பல்கலைக் கழகம் சிறந்தது என்ற தெரிவையும், பெற்றோர் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இரக்கப் போகிறவனுக்கு தெரிவுக்கு எங்கே வாய்ப்புக் கிடைக்கப் போகின்றது என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கின்றது. எங்கோ ஒரு பல்கலைக்கழகத்தில் இடங்கிடைத்தால் அதுவே பெரிய விடயம் என்ற நிலையில் இருப்பவர்கள் ஒருபுறம் இருக்க பணத்தை தாராளமாக வீசி அதிசிறந்து பல்கலைக் கழக அனுமதியைத் தேடுபவர்களும் நிறைய இருக்கின்றார்கள்.

ஆனால் உலக தரத்தினைப் பார்க்கும் போது எல்லாப் பல்கலைக்கழகங்களின் படிப்பும் ஒரே மாதிரியானதல்ல என்பது நன்கு புலனாகி விடும். எனவே இந்தக் கல்விச் சந்தையில் நல்ல பொருளை நுகர்வது போல நல்ல தரமான பல்கலைக் கழகத்தை தேர்வு செய்வது மிகமிக அவசியம் என்பதில் சந்தேகமே இல்லை. (ஆனால் அதற்கு பணபலமும் தேவை என்பது இன்னொரு பிரச்சினை)சரி உலகமெங்கும் பரந்து கிடக்கும் பல்கலைக் கழகங்களில் எது தரமுயர்ந்தது என்று எப்படிக் கண்டறிவது?

இதற்காகவே ஓர் அமைப்பு வருடா வருடம் இந்த ஆய்வை மேற்கொண்டு பல்கலைக் கழகங்களை அவற்றின் திறமைக்கேற்ப தரப்படுத்தி ஒரு பட்டியலை வெளியிட்டு வருகின்றது. 15 மொழிகளில் வெவ்வேறு நாட்டின் கல்விமான்களுக்கு, இந்த ஆய்வை மேற்கொள்ளும்படி அழைப்புகள் அனுப்பப்படுகின்றன. அந்த வரிசையில், ஆறாவது தடவையாக எடுத்த கணிப்பீட்டின் பிரகாரம் உலகளாவிய பல்கலைக் கழகங்கள் இப்படித்தான் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வருடம் 133 நாடுகளில் இருந்து 10,000 விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட துறைகளில் மிகச் சிறந்த பல்கலைக் கழகத் தெரிவை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டார்கள்.

தேசீயரீதியாகவும், உலகளாவிய ரீதியாகவும் இவர்கள் கல்வி கற்பிக்கும் முறை பற்றியும், ஆய்வுகளை மேற்கொள்ளும் முறை பற்றியும் தரவுகளை இவர்கள் சமர்ப்பித்தாக வேண்டும்.

2011ம் ஆண்டிலிருந்து இப்படியான , 80,000 வேறுபட்ட ஆய்வு அறிக்கைகள் இந்த அமைப்பிற்குக் கிடைத்துள்ளன. இவற்றின் உதவியுடன் மிகத் தரமான பல்கலைக் கழகத்தை எம்மால் இனங்காண முடிந்தது என்று மேலும் கூறுகின்றது இந்த அமைப்பு.

பொதுவாகவே பல்கலைக்கழகம், தரமான சிறந்த பல்கலைக் கழகம் என்றதும் நம் நினைவுக்கு வருவது இரட்டையர்களான ஒக்ஸ்பேர்ட், கேம்பிரிட்ஜ்




பல்கலைக் கழகங்கள்தான். இந்த அளவுக்கு உலகப் பிரசித்தி பெற்றவை இவை. உலகத் தலைவர்கள் பலரை தமது மாணவர்களாகக் கொண்டிருந்த பல்கலைக்கழகங்கள் இவை. இவை அச்சிட்டு பிரசுரிக்கும் நூல்கள் மிகத் தரமானவை. அதிலும் ஆங்கில அகராதிகள் உலகறிந்தவை..

ஆனால் இந்த வருடத் தரப்படுத்தலில், இரு பல்கலைக் கழகங்களுமே பின்னிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது, அதிர்ச்சியான தகவல்தான்.. அந்த இடத்தை அமெரிக்க பல்கலைக் கழகங்கள் கைப்பற்றி இருப்பது ஆச்சரியமான விடயம்.இரண்டாம், மூன்றாம் இடங்களையும் வேறிரு அமெரிக்க பல்கலைக் கழகங்கள் கைப்பற்றி விட்டு, நான்காம் ஐந்தாம் இடத்தை, பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகங்களுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து ஆறாவது தடவையாக ர்யுசுஏயுசுனு பல்கலைக்கழகம் முதலாம் இடத்திற்கு உயர்த்தப்பட, கடந்த வருடம் இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்த ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகம், ஐந்தாம் இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றது. கடந்த வருடம் நான்காம் இடத்திலிருந்த கேம்பிரிட்ஜ் தன் இடத்தை இந்த வருடமும் தக்க வைத்துக் கொண்டிருப்பது பெரிய சாதனை போல் தோன்றுகின்றது.

58 நோபல் பரிசில் வெற்றியாளர்களை உருவாக்கியது இந்த ஒக்ஸ்பேர்ட் பலகலைக்கழகம். மார்கிரெட் தட்சர் உட்பட 26 பிரித்தானிய பிரதமர்கள், ஒக்ஸ்பேர்ட்டில் கல்வி பயின்றவர்கள். முன்னாள் பாகிஸ்தானின் பெண் பிரதமர் பெனாஸீர் பூட்டோ, அமெரிக்க ஜனாதிபதி பில் கின்டன் போன்றவர்கள் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர்கள். ஜோர்தான் மன்னர் அப்துல்லா, முன்னாள் ஸ்ரீ லங்காப் பிரதமர் பண்டாரநாயக்கா, மாஜி கனடிய பிரதமர் பியர்சன் என்று குறைந்த பட்சம் 30 உலக நாடுகளின் மாஜி ஆளுனர்களை, ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகமே செதுக்கி எடுத்துள்ளது.

இப்படி ஒரு புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தை பின்னுக்குத் தள்ளிய அமெரிக்க பல்கலைக் கழகம் எந்த அளவிற்கு சக்தி வாய்ந்தது? 1636இல் ஸ்தாபிக்கப்பட்ட ஹர்வார்ட் பல்கலைக்கழகத்தை ஜோண் ஹர்வார்ட் என்பவர் முதற் தடவையாக பணமுதலீடு செய்து வளர்க்க உதவியதால், இவர் பெயர் அதற்கு சூட்டப்பட்டது. கடந்த ஆறு வருடங்களாக முதலாம் இடத்தில் தொடரும் இந்தப் பல்கலைக்கழகம் உலகிலேயே மிகப் பெரிய நூலகத்தைக் கொண்டிருப்பது இதன் தனிச் சிறப்பு. 8 அமெரிக்க ஜனாதிபதிகளை அளித்த பெருமையோடு, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் 62 பில்லியனர்களை இது உருவாக்கியுள்ளது.

பல அறிஞர்களைத் தோற்றுவித்துள்ள இந்தப் பல்கலைக் கழகம் இதுவரையில் 150 நோபல் பரிசுக்குரியவர்களை பயிற்றுவித்துள்ளதாகச் சொல்கிறார்கள்.



உலகின் அதிசிறந்த 100 பல்கலைக் கழகங்கள் என்ற தெரிவில், அமெரிக்கா இந்தத் தடவை முதல் இடத்தை 43 பல்கலைக் கழகங்களுடன் கைப்பற்றி இருக்கின்றது. பிரிட்டனோ இந்த முதல் நூறுக்குள் பத்துப் பல்கலைக் கழகங்களை நிறுத்தி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

சென்ற வருடம் பன்னிரண்டாக இருந்த தொகை இப்பொழுது பத்தாக வீழ்ச்சி கண்டிருப்பது, குறிப்பிடத் தக்க விடயம் என்பதை மறுப்பதற்கில்லை. நூறுக்குள் வந்த பத்திலும் கூட, கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, சில பல்கலைக் கழகங்கள் கீழிறங்கி இருப்பதை நாம் காணலாம்.

ஏன் இந்த வீழ்ச்சி?

உயர் கல்வித் தகைமை கொண்ட விரிவுரையாளர்களை, விரும்பிய வண்ணம் இங்குள்ள பல்கலைக்கழகங்கள் தமது பணிக்கமர்த்த முடியாத விசா கெடுபிடி இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று அபிப்பிராயப்படுகின்றார்கள்.

உயர் கல்விக்கான நிதி ஒதுக்கீடு கணிசமான அளவு தொடர்ந்து ஆண்டுக்கு ஆண்டு வெட்டுப்படுவது இன்னொரு காரணம் என்கிறார்கள்.

மாணவர்கள் தெரிவிலும் அரசியல் அழுத்தங்கள் தம்மை நெருக்குவதாக பிரிட்டனின் இரு உயர் பல்கலைக் கழகங்களும் குறைப்பட்டுக் கொள் கின்றன.

அமெரிக்க பல்கலைக் கழகங்கள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டு வருவதோடு, இவற்றின் பழைய மாணவர்கள், தங்கள் பல்கலைக் கழகங்கள் வளர, தாராளமாக பண உதவியும் செய்து வருகிறார்கள் என்று அறியப்படுகின்றது.

ஆசியாவின் பல்கலைக் கழகங்கள் தரப்படுத்தலில், அளவால் அதிகரிக்க பிரிட்டனின் கல்விக் கழகங்கள் வருடத்திற்கு வருடம் வீழ்ச்சி காண்பது, பலரதும் கவனங்களை ஈர்த்துள்ளது. டோக்கியோவின் பல்கலைக் கழகம் 12வது இடத்தையும், சீனப் பல்கலைக்கழகம் ஒன்று எட்டாவது இடத்தையும், பீக்கிங் பல்கலைக் கழகம் 11வது இடத்தையும் பிடித்திருப்பது பெரியதொரு பாய்ச்சல் என்று வர்ணிக்கிறார்கள்.

பிரிட்டனைத் தவிர, வேறெந்த ஐரோப்பிய நாடும் பெரிதாகச் சாதிக்காமையும்பலராலும் விமர்சிக்கப்படுகிறது. ஜேர்மனியைத் தவிர முதல் நூறு என்ற பட்டியலில் குறிப்பிடும்படி எந்த நாடும் இடம்பெறவில்லை மொத்தத்தில் சொல்வதானால், ஆசியாவும் அமெரிக்காவுமே பல்கலைக் கழகங்கள் விடயத்தில், பெரு வளர்ச்சியைக் கண்டுள்ளன என்று துணிந்து சொல்லலாம்.

காலங்காலமாக இங்கிலாந்தின் பெருமைக்குரிய அடையாளச் சின்னங்களாக விளங்கி,பல்கலைக் கழக சாம்ராஜ்யத்தில், தனி ஆட்சி நடாத்திக் கொண்டிருந்தவை இனி என்ன செய்யப் போகின்றன? அதிரடியாக எந்த நடவடிக்கைகளில் இறங்கப் போகின்றன?

காத்திருந்துதான் பார்ப்போமே

## ஆன்மீகம்





# துயர் தீர்க்கும் துளசி

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். அப்படி நோய்நொடி இல்லாமல் வாழ ஆன்மிகத்தோடு அறிவியலையும் எடுத்துச் சொல்லும் நம் இந்து மதத்தின் அறநெறிகளும், இயற்கை சார்ந்த வழிபாடு களும் ஆன்ம பலமும், தேகபலமும் அளிக்கும் பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன. அத்தகைய வழிபாடுகளில் குறிப்பிடத்தக்கது துளசி வழிபாடு.

பகவானின் சாந்நித்தியம் நிறைந்த துளசிக்கு பிருந்தா என்று மற்றொரு பெயரும் உண்டு. தினமும் துளசி மாடங்களில் தீபம் ஏற்றிவைத்து, மகாவிஷ்ணு மற்றும் துளசிதேவிக்கு உரிய துதிப்பாடல்களையும் ஸ்லோகங்களையும் பாடி வழிபடுவதால், அந்த வீட்டில் தம்பதி ஒற்றுமை மேலோங்கும் மகிழ்ச்சி பெருகும் என்கின்றன ஞானநூல்கள். இது மட்டுமல்ல, இன்னும்பல மகிமைகள் உண்டு துளசிச்செடிக்கு பொதுவாக பல மரங்கள், செடிகள் பகல் நேரத்தில் கரியமில வாயுவை சுவாசித்துக் கொண்டு, ஒக்சிஜனை வெளியிடும், இரவு நேரத்தில் அது தலைகீழாக நடக்கும். ஆனால், மகத்துவம் வாய்ந்த துளசி பூமிக்கு 24 மணி நேரமும் ஒக்சிஜனை மட்டுமே தரும் சிறப்பு வாய்ந்தது. துளசிச் செடியை வீட்டில் வளர்ப்பதன் மூலம், அதன் மூலிகைத் தன்மை நிறைந்த நறுமணத்தால், நம் சுவாசம் ஆரோக்கியமாகும். நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும். பச்சை துளசி, பச்சைக் கற்பூரம், ஏலக்காய் கலந்த தீர்த்தத்தை குடிக்கும்போது, நம் உடலில் அது ஒரு சிறந்த நச்சு நீக்கியாக செயல்பட்டு உடலுக்கு நன்மை செய்கிறது.

நான்கு துளசி இலைகள், ஒரு அப்பிளுக்கு சமம் என்றே சொல்லலாம். ஒருவர் தினமும் துளசிக் கொழுந்துகள் நான்கைச் சாப்பிட்டுவந்தால், அவருக்கு நோய் எதிர்ப்புத் திறன் அதிகரிக்கும். ஆயுள் கூடும். ஏற்கெனவே இருக்கும் நோயின் வீரியம் மெல்ல மெல்ல குறையும். துளசி இலையை தினமும் சாப்பிட்டு வந்தால் புற்றுநோய்க் கட்டிகள் அழியும். அது திரும்ப வராமல் தடுக்கும் சக்தியும் உண்டு. மேலும், புற்றுநோய் கதிரியக்க சிகிச்சை எடுத்திருந்தால், அந்த சிகிச்சையின் பக்க விளைவுகளிலிருந்தும் துளசி காக்கும். உலகில் 200க்கும் அதிகமான துளசி வகைகள் இருக்கின்றன. உருவ அமைப்பு வேறுபட்டு இருந்தாலும், அவற்றின் பலன்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. பிரம்ம முகூர்த்த நேரமான அதிகாலை 2 மணி முதல் 6 மணி வரை, ஓசோன் (O3) வாயுவை வெளியிடுமாம் துளசி. இதனாலேயே நம் முன்னோர்கள். அதிகாலையில் எழுந்து குளித்து, துளசிச் செடியை வணங்க ஆரம்பித்தனர் போலும்.

துளசிச் செடியை வலம் வருவதால், ஓசோன் வாயு நம் சுவாசத்தின் மூலம் உள்சென்று உறுப்புகளுக்கு புத்துணர்ச்சியும், மூளைக்கு சுறுசுறுப்பையும் தருகிறது. மரங்கள் வளர்க்க முடியாத சூழ்நிலையில், மொட்டைமாடி, வாசல், பால்கனி போன்றவற்றில் துளசிச் செடியை வளர்ப்பதன் மூலம், பரிசுத்தமான பிராண வாயுவைப் பெறலாம்.



## அத்தியாயம்- 2

காலையில் எழுந்து பல் துலக்கிக் கொண்டிருந்தபோது, ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவத்தை மனம் அசைபோட்டதை அவர் நினைத்துப் பார்த்தார். அந்த வளைகுடா யுத்தத்தின் பின் தன் வாழ்வு எப்படி எப்படியெல்லாம் மாறியிருக்கின்றது. ஒரு செய்தியை வாசிக்கப் போய் அது எப்படி பழைய நினைவுகளையெல்லாம் கிளறிவிட்டிருக்கின்றது என்று நினைத்து




# சந்தர்ப்பவாதிகள்

ஆச்சரியப்பட்டார்.மனித மனம் என்பது ஆண்டுக்கணக்கான நிகழ்வுகளைப் பொத்தி பொத்தி வைத்துக் கொண்டிருக்கின்றது. சமயம் பார்த்து பழைய நிகழ்வுகள் பீறிட்டு கிளம்பி, மனத்திரையில் ஓட ஆரம்பித்து விடுகின்றன.வளைகுடாவில் பணிப்பெண்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள் என்றதொரு ஆய்வுக் கட்டுரையில் குவைத் நாட்டின் பெயரும் அடிபட்டது. அதை வாசித்ததன் விளைவாகத்தான் பழைய நிகழ்வுகள் இங்கே கிளறப்பட்டன.

நேரத்தைப் பார்த்தார். மணி ஒன்பதைத் தாண்டியிருந்தது. இன்று இரட்டைத் தட்டுப் பேருந்தில் பயணிக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்திருந்தார்.அவருக்கு இப்பொழுது வயது அறுபத்தியேழைத் தொடுகின்றது. பிறந்த மண்ணை விட்டு வெளியேறி, கொழும்பில் வருடக் கணக்காக வேலை செய்து விட்டு, வெளிநாட்டு வாழ்க்கைக்கு மாறியவர் சரன். சொந்த மண்ணின் உழைப்பில் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது என்று நினைத்து விமானம் ஏறினார். கொஞ்ச வருடங்கள் உழைத்தால் போதும் என்று நினைத்து, வெளிநாட்டு மண்ணிலேயே தன் இளமையைத் தொலைத்தவர் இந்த சரன் என்ற சரவணன். சரனுக்கு மூன்று பெண்பிள்ளைகள். மூவருமே கல்யாணமாகி, இலண்டனில்தான் வாழ்கிறார்கள். மூத்தவள் பெயர் பிரியா. இரண்டாவது பெண் நந்தா. கடைசியாகப் பிறந்தவள் பிருந்தா. சரனுக்கு இரண்டாவது பெண்ணோடு கூடுதலான ஒட்டுதல்.

கடந்த ஒரு மாதமாக இலண்டனில் புது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கும் அவர் வாரத்தில் நான்கு நாட்களாவது நந்தாவுடன் இருக்காவிட்டால் திருப்தியாக இருக்காது. இந்தக் கூடுதல் ஒட்டுதல், நந்தாவின் மகள் சிந்துவால் ஏற்பட்டிருக்கலாம். நந்தாவின் மகள் சிந்துவின் மீது இவருக்குக் கொள்ளைப் பிரியம். மூத்தவள் பிரியாவிற்கு ஓர் ஆண்பிள்ளை. கடைசிப் பெண் பிருந்தாவிற்கு இன்னும் பிள்ளைகள் இல்லை. பிருந்தாவிற்கு திருமணத்தை முடிக்கும்வரை காத்திருந்தவர்போல, அவர் மனைவி விஜயலட்சுமி, ஒருநாள் யாருமே எதிர்பாராமல் இருதய அதிர்ச்சியில் இறந்துவிட்டாள். அவள் குண்டுத் தேகம் அவளுக்கு எமனாக வந்து வாய்த்துவிட்டது. சிறுவயது தொட்டே ஆங்கில மொழியில் சரனுக்கு அலாதிப் பிரியம். வகுப்பில் ஆங்கில மொழியில் அவரை மிஞ்ச யாருமில்லை. கிறிக்கெட் விளையாட்டில் நல்ல ஆர்வம் இருக்கின்றது. படித்த பாடசாலையில் கிறிக்கெட் விளையாடாவிட்டாலும் கிரிக்கட்டைப் பற்றிய ஒவ்வொரு நுணுக்கமான விபரங்களையும் அவர் அறிந்து வைத்திருந்தார். கிறிக்கெட் போட்டிகளின் போது இடம்பெறும் நேர்முக வர்ணனைகளை வானொலி மூலம் கேட்கத் தவறமாட்டார்.

தொலைக்காட்சி அறிமுகத்தின்பின் நேரடியாக விளையாட்டுக்களைப் பார்க்கும் வாய்ப்பு வந்தது. எந்த மோதலாகட்டும் எம் சீ சீ என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு வந்த இங்கிலாந்து அணியின் பக்கந்தான் அவர் இருப்பார். இலங்கை அணி விளையாடினாலும் அவர் இங்கிலாந்தின் பக்கந்தான். இங்கிலாந்து தோற்றுவிட்டால் பெரிதாக எதையோ இழந்து விட்டது போல சோகமாக இருப்பார். புத்தகங்களில் எவ்வளவு பைத்தியமோ அந்த அளவுக்குக் கறிக்கெட்டிலும் பைத்தியம். இளம் வயதில் அவரிடம் ஒரு பெரிய அல்பம் இருந்தது. அது நிறைய இருந்தது என்ன தெரியுமா? கிறிகெட் வீரர்களின் வர்ணப் படங்கள். சஞ்சிகைளில் கத்தரித்தவை. ரெட் டெக்ஸ்ரர், பிரெடி ட்றூமன், கென் பரிங்டன் போன்றவர்களின் படங்கள் அதிகமாக இருக்கும். இவர்கள் முன்னாள் இங்கிலாந்தின் கிரிக்கட் ஜாம்பவான்கள்.....

வாசிப்பதிலும், பயணிப்பதிலும் சரனுக்கு பெரு விருப்பு உண்டு. தனக்கு வாசிக்க முடியாத நிலை வரும்போது, தன் உலகம் இருண்டு விடும் என்று சரன் திடமாக நம்பினார். சுவிஸ் நாட்டில் 29 வருடம் வேலை செய்து அவருக்கு இப்பொழுது ஓய்வூதியம் கிடைக்கின்றது.

இலண்டன் வாழ்க்கை இப்பொழுதுதான் தொடக்கப்பட்டிருக்கின்றது. புதிய கட்டில். புதிய சூழல். நித்திரை சட்டென் வந்துவிடுவதாக இல்லை. கடந்த ஒரு மாதமாக நித்திரையோடு மல்லுக்கட்டும் நிலை அவருக்கு!

இலண்டன் இரட்டைத் தட்டுப் பேருந்துப் பயணம் அவருக்கு வித்தியாசமானதாகத் தெரிந்தது. ஒரு வளைவில் இலாவகமாக வண்டியைத் திருப்பிய சாரதி, பேருந்துத் தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்தினார்.

அது ஒரு பெண்கள் பாடசாலையை அண்மித்த தரிப்பிடம். பாடசாலைச் சீருடை அணிந்த பல மாணவிகள் கலகலவென்ற பேச்சோடு, பேருந்துக்குள் ஏறி மேல் தட்டில் வந்து உட்கார்ந்தார்கள். சரனுக்கு பக்கத்தில் வந்து ஒரு பயணி உட்கார்ந்தார். பயணி பக்கம் சரன் திரும்பியபோது, அவர் திகைத்துப் போனார். அந்தப் பயணியின் முகத்திலும் ஆச்சரிய ரேகைகள் படர்ந்தன.

அட சரன் மாமாவல்லே... என்ன இங்க................?

நீர் சத்தியன்தானே?..நான் பென்சன் எடுத்திற்றன். இங்கதானே என்ர மூண்டு பிள்ளையளும் இருக்கினம்? சத்தியன்தான். அதே சத்யன்தான் என்றான் சத்யன் என்ற சத்யசீலன்.யாழ்ப்பாணத்தில அஞ்சு வருஷத்திற்கு முந்திச் சந்தித்த பிறகு இப்பதான் சந்திக்கிறன் எண்டு நினைக்கிறன் . எப்படிச் சுகமாக இருக்கிறீரே? எப்ப இங்க வந்தனீர்? அப்பா எப்படி இருக்கிறார்? டயபிட்டிக் வியாதியில கஷ்டப்படுகிறன் எண்டு கவலைப்பட்டார். சரன் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனார். அவருடன் ஒன்றாகப் படித்த சித்திரவேலுவின் மகன்தான் சத்யன். சுவிஸ்ஸிலிருந்து ஒரு மாத கம்பனி லீவில் யாழ்ப்பாணம் போயிருந்தபோது தகப்பனையும் மகனையும் வீட்டில் சந்தித்திருந்தார்.தான் ஸ்டுடன்ற் விசாவில் இலண்டன் வந்திருப்பதாகவும், பல்கலைக் கழகத்தில் 3 வருடப் பட்டப் படிப்பை முடித்துவிட்டதாக சத்தியன் கூறியபோது சரன் சந்தோஷப்பட்டார்.

" நல்ல விஷயம் தம்பி. அப்பா உம்மைச் சொல்லிக் கவலைப்பட்டவர். இங்க எப்படியும் ஒரு வேலை எடுத்துப் போடலாம். அப்பாவுக்கும் பெரிய மன ஆறுதலா இருக்கும். "

"அங்கிள் நீங்க சொல்லுறது சரிதான். ஆனால் எல்லாம் பிழைச்சுப் போச்சு."

சத்யனின் முகத்தில் குழப்ப ரேகைகள்..

"என்ன ஏதும் பிரச்சினையே தம்பி"' சத்யனின் மனக்குழப்பம் இப்பொழுது சரனிடமும் தொற்றியிருந்தது.

சந்தோஷமோ கவலையோ அந்நியோந்நியமாக இருப்பவர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் தொற்றிக் கொண்டு கெட்டியாகப் பிடித்து விடுகின்றது.

''இன்னும் இரண்டு மாசத்தில வீட்ட திரும்பிப் போகணும் அங்கிள்'' முகவாட்டத்தோடு சத்யன் பதில் அளித்தான். சரனுக்கு இது அதிர்ச்சியைத் தந்தது.

"என்ன தம்பி ஏதாவது பிரச்சினைக்கிள மாட்டீற்றிங்களோ"?

"பிரச்சினை ஒண்டுமில்லை. படிச்சு முடிச்சா விசா புதுப்பிக்க மாட்டினமாம். சொந்த நாட்டிற்கு திரும்பிப் போகவேணுமாம். புதுச் சட்டம் "

"அட கடவுளே"

தன் பிள்ளையைத் திருப்பி அனுப்பி விடுவது போன்ற வேதனை சரனுக்கு! அவரின் நெருங்கிய நண்பன் சித்திரவேல். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதைபோல, மகனை ஒப்பேற்றி விட்டேன் என்ற நிம்மதியில் இருந்த தகப்பனுக்கு இப்படியொரு நிலை வரத்தான் வேண்டுமா?

''கட்டாயம் திரும்பிப் போகத்தான் வேணுமோ தம்பி? யாரையாவது விசாரிச்சுப் பார்த்தனீரா?''"அங்கிள் எல்லாருக்கும் உள்ள சட்டந்தானே எனக்கும். ஒண்டும் செய்யேலாது. யாழ்ப்பாணம் போய் யோசிப்பம். ஒரு பட்டதாரியாய்ப் போறன் எண்ட நிம்மதி இருக்கு"பேருந்து அடுத்த தரிப்பில் நின்றபோது, அவர் இறங்க வேண்டியாக

**ஏ.ஜே.ஞானேந்திரன்**

வேண்டும். "தம்பி எதுக்கும் யோசிக்காதையும். கடவுள் விட்ட வழி"

அவசரம் அவசரமாக பேருந்திலிருந்து இறங்கி நடக்க ஆரம்பித்தார் சரன்......தன் நண்பனின் மகனுக்கு பெண் பார்க்கும் படலம் யாழ்ப்பாணத்தில் அவசரம் அவசரமாக நடந்து கொண்டிருக்கின்றது. இப்படித் திருப்பி அனுப்பப்படுவதால் எல்லாம் குழம்பப் போகின்றது என்று அப்பொழுது அறிந்திருந்தால் சரன் கவலை மேலும் அதிகமாகி இருக்கும்.

(தொடரும்)

## திராவிடக் கட்சிகளால் தமிழக வளர்ச்சி பாதிப்பு -நரேந்திர மோடி-



தமிழகம் வளர்ச்சிப் பெறாததற்கு 50 ஆண்டுகளாக தமிழகத்தை ஆட்சி செய்த திராவிடக் கட்சிகளே காரணம் என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றஞ்சாட்டினார். நாகை மாவட்டம், வேதாரண்யம், தேத்தாக்குடியில் புதன்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது : மத்தியில் பாஜக அரசுப் பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச்சூடு நடவடிக்கை மூலமான மீனவர்களின் உயிரிழப்பு முற்றிலுமாகத் தடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மீனவர்களின் நலன் காக்கும் அரசு பாஜக அரசுதான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முந்தைய மத்திய அரசில், எதிலும் ஊழல் என்ற நிலையே இருந்தது. நிலக்கரியில் ஊழல், 2-ஜி, 3-ஜி அலைக்கற்றை ஊழல் என எங்கும், எதிலும் ஊழலே நிரம்பியிருந்தது. அலைக்கற்றை ஊழலில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், தற்போது வளர்ச்சிப் பெற்றிருப்பது தமிழக மக்கள் அறிந்ததே.நாட்டின் வளர்ச்சியை பாதிப்பது ஊழல்தான் என்பதை மத்திய பாஜக அரசு முழுமையாக உணர்ந்து, ஊழலற்ற ஆட்சி நிர்வாகத்தை வழங்கி வருகிறது. ஊழலற்ற அரசு பாஜக அரசு தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பில் இடைத்தரகர்கள் தலையீட்டை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். என்ற அடிப்படையிலேயே, மத்திய அரசின் நிலை-3, நிலை-4 பணிகளுக்கான தேர்வு கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தகுதி மற்றும் திறமை உள்ளவர்களுக்குப் பணி வாய்ப்புக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகம் வளர்ச்சிப் பெறாததற்கு 50 ஆண்டுகளாக தமிழகத்தை ஆட்சி செய்த திராவிடக் கட்சிகளே காரணம். பாஜக ஆட்சி செய்யும் அனைத்து மாநிலங்களிலும் தடையில்லா மின்சாரம், சுகாதாரமான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஊழல் இல்லாத மாநிலத்தில் மட்டுமே வளர்ச்சியைக் காண முடியும். எனவே, தமிழகத்தின் ஆட்சி வாய்ப்புக்கு 2 திராவிடக் கட்சிகளை மாறி, மாறி தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் மக்கள், திராவிடக் கட்சிகளிடமிருந்து விடுதலைப் பெற்று, தமிழகத்தில் பாஜக ஆட்சி மலரச் செய்ய வேண்டும். தமிழகத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மக்கள் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றார் பிரதமர் நரேந்திர மோடி.

# போரினால் உலகம் முழுவதும் 4 கோடி அகதிகள்



உலகம் முழுவதும் போர் உள்ளிட்ட உள்நாட்டு கலவரங்களால் வெவ்வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை 4.08 கோடியாக உயர்ந்துள்ளது என ஆய்வறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது.

சர்வதேச அளவில் புலம்பெயர்ந்துள்ள மக்களின் விவரங்கள் குறித்த ஆய்வு ஒன்று வெளியாகியுள்ளது. ஜெனிவாவை மையமாக கொண்டு செயல்படும் புலம் பெயர்ந்தோர் கண்காணிப்பு மையம் அதனை வெளியிட்டுள்ளது.

அதன்படி, உலகம் முழுவதும் போரினால் பல்வேறு இடங்களுக்கு புலம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை 4.08 கோடியாக உயர்ந்துள்ளது. எப்பொழுதும் இல்லாத அளவிற்கு கடந்த ஆண்டு மட்டும் அதிக அளவில் புலம்பெயர்வு நடைபெற்றுள்ளது. 2015-ம் ஆண்டில் மட்டும் 86 லட்சம் மக்கள் ஏமன். சிரியா, ஈராக் உள்ளிட்ட நாடுகளில் தலைதூக்கியுள்ள போர் காரணமாக புலம்பெயர்ந்துள்ளனர்.

அதில் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் வடக்கு ஆபிரிக்காவில் இருந்து மட்டும் 48 லட்சம் பேர் அகதிகளாக புலம் பெயர்ந்துள்ளனர். ஏமன் நாட்டில் இருந்து மட்டும் 22 லட்சம் மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர். சிரியாவில் இருந்து 13 லடசம், ஈராக்கில் இருந்து 11 லட்சம் மக்களும் புலம்பெயர்ந்துள்ளனர்.

சவுதிஅரேபிய அரசின் கூட்டுப்படைகளால் மட்டும் ஏமன் நாட்டில் 6,427 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கை சுட்டுகிறது. மேலும் 5 ஆண்டுகளாக தொடரும் சிரியாவின் உள்நாட்டு கலவரங்களால் 2,70,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றது அந்த அறிக்கை.

1.92 கோடி மக்கள் பேரழிவு காரணமாக அகதிகளாக மாறி உள்ளனர். இந்தியா, சீனா மற்றும் நேபாளம் முறையே 37 லடசம், 36 லட்சம் மற்றும் 26 லட்சம் மக்கள் அகதிகளாகி உள்ளனர்.

போர் பதற்றம் மற்றும் இயற்கை பேரழிவு காரணமாக மட்டும் கடந்த ஆண்டில் 2.78 கோடி மக்கள் மொத்தமாக அகதிகளாகி உள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வடமாகாண சபையின் ...

வடமாகாண சபையின் சுற்றுச் சூழலுக்குப் பொறுப்பான அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் சுண்ணாம்புக் கல் அகழ்வது பாதுகாப்பற்றது என்று கூறியது எந்த வகையில் சரி என்று தெரியவில்லை. விஞ்ஞான ரீதியாக இவ்வாறான ஆராய்ச்சி எப்பொழுதுமே இதுவரை செய்யப்படவே இல்லை.

மேலும் புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்களுக்கான திணைக்களம் இதுவரை காலமும் சுண்ணாம்புக் கல் சம்பந்தமாக வடபகுதியில் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி செய்ததாகத் தெரியவில்லை.

எனவே எந்த விதமான முகாந்திரமோ, அதிகாரபூர்வ செயற்பாடோ இல்லாமல் சுண்ணாம்புக் கல் அகழ்வது தவறு என்று குறிப்பிடுவது, அறிக்கை விடுவது, வடமாகாண சபையில் தீர்ப்பு நிறைவேற்றுவது எல்லாமே சர்ச்சைக்குரியதாகும்.

மாநாகர சபையின் இந்தத் தீர்மானம் சம்பந்தமாக வடமாகாணத்தில் மீண்டும் சீமெந்துத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாமா? என்று ஆராய்வதற்கு கூட்டம் ஒன்று சென்ற 25 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தின் போது வடமாகாண சபையின் சுற்றுச் சூழல் மற்றும் விவசாயத் துறை அமைச்சர் ஐங்கரநேசன், சீமெந்து உற்பத்திக்கு முக்கிய மூலப் பொருளான சுண்ணாம்புக் கல் அகழ்வதற்கு தனது ஆட்சேபத்தைத் தெரிவித்தார். சுண்ணாம்புக் கல் அகழ்வது சம்பந்தமான அவரது கருத்து எவ்வளவு தூரம் விஞ்ஞான ரீதியானது என்று அறிந்து கொள்வதற்கு அவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றோம். அவரைத் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. அவரது அமைச்சில் பொது நல உறவுகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் பல முறை நினைவூட்டியும் அவர் அமைச்சருடன் தொடர்பை ஏற்படுத்தித் தர மறுத்து விட்டார்.

இதையடுத்து, வட மாகாண மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை இயக்குனர் M.A.C நஜீப்பை தினச்செய்தி தொடர்பு கொண்ட போது இதுவரை காலமும் வடபகுதில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் எவ்வளவு தொகையான சுண்ணாம்புக் கல் உள்ளன என்று எந்த விதமான ஆராய்ச்சியும் செய்யப்படவில்லை எனக் கூறினார்.

அதேநேரத்தில் காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள சுற்றுச் சூழலில் 80 மில்லியனுக்கு மேற்பட்ட கற்கள் இருப்பதாகவும், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு தினசரி 3500 மெற்றிக்தொன் அகழ்ந்தெடுத்தாலும் நூறு வருடங்களுக்கு மேல் தேவையான சுண்ணாம்புக் கற்கள் இருப்பதாகவும் வேறொரு ஆய்வு கூறுகிறது.

மேலும் மத்திய சுற்றுச் சூழலுக்குப் பொறுப்பான நஜீப்பிடம் தினச்செய்தி கேட்டபோது மொத்தமாக யாழ். மாவட்டத்தில் 51 கல் அரைக்கும் ஆலைகள் உள்ளதாகவும், புவிச்சரிதவியல் அளவைகள் பற்றிய சுரங்கப் பணிமனை தேவையான அனுமதி வழங்குகின்றது என்றும் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட கல் அரைக்கும் ஆலைகளால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இல்லாமல் இயங்குகின்றதா என்று மேற்பார்வை செய்வது தங்களது கடமை என்று கூறினார்.

இந்த கல் அரைக்கும் இயந்திரங்களுக்கு தினசரி நூறு டிறக்ரருக்கும் மேற்பட்ட சுண்ணாம்புக் கற்கள் அகழப்படுகின்றது என்றும் அதேநேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 பிரதேச சபைகள் வீதிகள் திருத்துவதற்கு சுண்ணாம்புக் கற்களையே பயன்படுத்துகின்றன என்றும் தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டில் சீமெந்து உற்பத்திக்கு போதியளவு சுண்ணாம்புக் கற்கள் மற்றும் போதியளவு களிமண்ணும் உள்ளன என்ற காரணத்தாலே தான் இந்த சீமெந்துத் தொழிற்சாலையை 1950 ஆம் ஆண்டு நிறுவினர்.

வடமாகாண சபையும், வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினரும் கூறுவது போல் கிளிங்கரை அதாவது கட்டி alite மற்றும் belite உட்பட பல்வேறு கல்சியம் சிலிகேட் கொண்டுள்ளது. Tricalcium அலுமினேட் மற்றும் கசியம் aluminoferrite பிற பொதுவான கூறுகள் உள்ளன. இந்த கூறுகள் பெரும்பாலும் களிமண் மற்றும் சுண்ணாம்பு வெப்பமான சிட்டு உருவாக்கப்படுகின்றன.

இந்த கிளிங்கரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தால் காங்கேசன்துறையில் உற்பத்தி செய்யும் சீமெந்தின் விலை அதிகரிக்கும். இவ்வாறு அதிகரித்தால் உள்ளூர் உற்பத்தியான காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி பாதிக்கப்படும். விலை உயர்ந்தால் மக்கள் மலிவில் உற்பத்தி செய்யப்படும் இன்றேல் இறக்குமதி செய்யப்படும் சீமெந்தையே கொள்வனவு செய்வார்கள்.

எனவே வடமாகாண சபையும், அமைச்சர் ஐங்கரநேசனும் சுண்ணாம்புக் கல் சம்பந்தமான விடயத்தை மீண்டும் மீள் பரிசீலனை செய்தால் பயனுடையதாக இருக்குமென நம்புகின்றோம்.

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## புதைக்கப்பட்ட பிரபாகரனின் ...

பிரபாகரனின் உடல் புதைக்கப்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒரு ஆங்கில வார இதழுக்குப் பேட்டி அளித்திருந்தார்.

சென்ற ஏப்ரல் 3 ஆம் திகதி வெளிவந்த சன்டே லீடர் (Sunday leader) என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா கொடுத்த இப்பேட்டியில் பிரபாகரனின் உடல் புதைக்கப்பட்டதாகக் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு புதைக்கப்பட்டிருந்தால் பிரபாகரனின் பூதவுடலை மீண்டும் வெளியே எடுத்து இந்து சமய முறைப்படி நீத்தாருக்கான ஈமக்கிரியைகள் செய்வதற்கு அனுமதி தருமாறு இலங்கை ஜனாதிபதியிடம் சிவாஜிலிங்கம் தினச்செய்திப் பத்திரிகையூடாக இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக தினச்செய்திக்கு மேலும், அவர் கூறுகையில் பிரபாகரனின் தகப்பனார் திருவேங்கடம் வேலுப்பிள்ளை (10-01-2010) இறந்த பொழுது அவரது ஈமக்கிரியைகளைத் தாமே செய்ததாகவும் அதேபோலவே பிரபாகரனின் தாயார் பார்வதி வேலுப்பிள்ளை நோயுற்றிருந்த போதும் இறுதிக் காலத்தில் பராமரித்து, (22-02-2011) இறுதிச் சடங்கையும் தானே செய்ததாகவும் சிவாஜிலிங்கம் தினச்செய்திக்குக் கூறினார்.

மேலும் சண்டே லீடர் ஆங்கில வாரப் பத்திரிகைக்கு சரத் பொன்சேகா அளித்த பேட்டியில் பிரபாகரன் கொல்லப்பட்டார். உடல் அடையாளம் காணப்பட்டது. "அவரின் உடலை யாரும் உரிமை கோரவில்லை," எனவே புதைத்து விட்டோம் எனக் கூறினார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரபாகரனைக் கொன்று விட்டோம் உடலை இறுதிச் சடங்குக்குத் தரவுள்ளோம் உரியவர்கள் உரிமை கோரலாம் என்று சரத் பொன்சேகாவோ, அரசாங்கமோ பகிரங்க வேண்டுகோள் விடவில்லை.

அவ்வாறிருக்கும் பொழுது சரத் பொன்சேகாவே 23 மே 2009 ஆம் ஆண்டு 'ரிவிர' பத்திரிகையில் வெளி வந்த பேட்டியில் "பிரபாகரன் கொல்லப்பட்டார். உடல் அடையாளம் காணப்பட்டது. நாம் உடலை எரித்து சாம்பலை இந்து சமுத்திரத்தில் வீசி விட்டோம்," என்று கூறியிருந்தார்.

ஆனால் முன்னர் எரித்து சாம்பல் வீசப்பட்டது என்று சொன்னவர் இப்பொழுது புதைத்து விட்டோம் என்று கூறுகிறார். அதுமாத்திரமல்லாமல் பிரபாகரன் கொலை செய்யப்பட்டார் என்று ஒரு பகுதியினரும் குண்டடிபட்டு இறந்தார் என்று வேறொரு பகுதியினரும் கூறுகின்றார்கள்.

இவ்வாறான குழப்பத்தில் பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்று தெளிவான விளக்கம் தரவேண்டும் என்று சிவாஜிலிங்கம் கேட்டுள்ளார்.

அதேநேரம் பிரபாகரனின் சென்னையில் வாழும் மூத்த தமக்கையான மதியாபரணம் ஜெகதீஸ்வரியின் வல்வெட்டித்துறையில் இருந்த வீட்டினை இராணுவத்தினர் 29 ஏப்ரல் 2010 இல் உடைத்துத் தரைமட்டமாக்கினர். உடைத்த கற்களைக் கூட விடாமல் இராணுவ முகாமிற்கும் எடுத்துச் சென்றனர்.

வடபகுதிக்கு வரும் சிங்கள சுற்றுலாப் பயணிகள் பலர் அந்த வீட்டிற்குச் சென்று தங்களின் மரியாதையையும், வணக்கத்தையும் செலுத்திச் செல்வார்கள். இதனாலேயே ஜெகதீஸ்வரியின் வீட்டை உடைத்து கற்களைக் கூட இராணுவ முகாமிற்குள் போட்டு வைத்துள்ளனர்.

**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள் மற்றும் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

தொடர்புகளுக்கு
**தினச்செய்தி வாரமலர்**
தில்லைக்கட்டி வீதி
சுன்னாகம்.
தொ.பேசி : 021 7539300
தொ.நகல் : 021 7539300
ஈமெயில் : thinacheithi@gmail.com

தினச்செய்தி
வாரமலர்



வடக்கின் வல்லவன் - 2015

# தினச்செய்தியின் அனுசரணையில் "வடக்கின் வல்லவன் - 2"

வடமாகாணத்தில் உதைபந்தாட்ட விளையாட்டுக்கு ஊக்கமளிக்கவும், இளைஞர்கள் பங்குபற்றி விளையாடுவதற்கும் என்ற உயரிய நோக்கத்துடன் 'தினச்செய்தி" வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து வடமாகாண உதைபந்தாட்டப்போட்டி கடந்த வருடம் முதன் முதலில் நடாத்தியது.





இந்த உடைபந்தாட்டப் போட்டியில் வடமாகாணத்திலிருந்து 47 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் `திகதி மின்னொளியில் இறுதிப் போட்டி நடைபெற்றது. வடமாகாணத்தைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இந்த போட்டியைக் கண்டு களித்தனர். இந்த போட்டிக்கு பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் ஏ. நடராஜன் கலந்து கொண்டார். வடக்கின் வல்லவனாக தெரிவு செய்யப்பட்ட நாவாந்துறை சென்மேரீஸ் விளையாட்டு கழகத்திற்கு ரூபா 200, 000 பரிசும் வெற்றிக் கிண்ணமும் தினச்செய்தியின் சுழற்கோப்பையும் வழங்கப்பட்டது. 2 ஆம் இடம் பெற்ற மன்னார் கில்லரி விளையாட்டு கழகத்திற்கு ரூபா 100, 000 மும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. 3 ஆம் இடம் பெற்ற மன்னார் சென் லூசியஸ் விளையாட்டுகழகத்திற்கு ரூபா 50, 000 மும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. நான்காம் இடம் ரூபா 25, 000 பணப் பரிசினை வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

சுப்பர் 8 சுற்றுக்கு தெரிவான அணிகளுக்கு தலா ரூபா.10, 000 பணப்பரிசு வழங்கப்பட்டது. முதல் நான்கு இடங்களைப் பிடித்த அணிகளுடன் மன்னார் சென்.ஜோசப், பலாலி விண்மீன், மயிலங்காடு ஞானமுருகன், மன்னார் புனித அந்தோனியார் ஆகிய விளையாட்டுக் கழகங்களும் பெற்றுக் கொண்டன.

தொடர் ஆட்ட நாயகன் விருதுடன் ரூபா 25, 000 பணப்பரிசு : ரங்சன் (கில்லரி), சிறந்த கோல் காப்பாளர் விருதுடன் ரூபா 5, 000 பணப்பரிசு : சரத்பாபு (கில்லரி), வளர்ந்து வரும் வீரர் விருதுடன் ரூபா 5, 000 பணப்பரிசு : கௌரிதாசன் (ஆதி சக்தி), நன்நடத்தைக்கான அணி விருதுடன் ரூபா 5, 000 பணப்பரிசு : (கில்லரி), மக்கள் மனம் கவர்ந்த வீரர், ஓட்டப்பந்தய துவிச்சக்கர வண்டி மற்றும் வெற்றிக் கிண்ணத்தை டிக்கோணிங் (சென்.ஜோசப்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

அரை இறுதிக்குத் தெரிவான அணிகளுக்கான ஊக்குவிப்பு தொகையாக புலம்பெயர் கழுகுகளின் பரிசுத் தொகை தலா ரூபா 15, 000 ஐ சென்.மேரிஸ், கில்லரி, சென்.லூசியஸ், ஆதி சக்தி ஆகிய விளையாட்டுக்கழகங்கள் பெற்றுக் கொண்டன.

அதே போல் Season - 2 வடக்கின் வல்லவன் தினச்செய்தி அனுசரணையுடன் ஆரம்பமாகியுள்ளது. வடக்கின் வல்லவன் Season - 2 இல் பங்குபற்றுவதற்கு 74 விளையாட்டுக் கழகங்கள் போட்டியிடுகின்றன. இம்முறையும் வடக்கின் வல்லவனாக வெற்றி பெறும் அணிக்கு ரூபா 200, 000 பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் தினச் செய்தி சுழற்கோப்பையும் வழங்கப்படும். 2 ஆம் இடம் பெறும் அணிக்கு ரூபா 100 000 மும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும். அதே போல் 3 ஆம் இடம் பெறும் அணிக்கு ரூபா. 50 000 மும் வெற்றிக் கிண்ணமும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வடக்கின் வல்லவன் விளையாட்டுப் போட்டியை வெற்றிகரமாக நடப்பதற்கு உதவிய பருத்தித்துறை விளையாட்டுக்கழகத்தின் தலைவர் நவனீதமணி, செயலாளர் அருளானந்த சோதி மற்றும் பருத்தித்துறை லீக்கின் 11 உறுப்பினர்களுக்கும் தினச்செய்தி அதன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

வடக்கின் வல்லவன் Season - 2 உதை பந்தாட்ட விளையாட்டுப்போட்டி சம்பந்தப்பட்ட விபரங்கள் தினச்செய்தி இணையத்திலும் வார மலரிலும் சுடச்சுட வெளியிடப்படும்.



இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மே. 07, 2016 அன்று வெளியிடப்பட்டது.